நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 06 வியாழக்கிழமை (19.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:113

# வன்னி மக்களின் மோசமான நிலை; அச்சம் தெரிவிக்கின்றது சர்வதேசம்

## ஐ.நா.மனித உரிமைக் கூட்டத்தில் வெளிப்படுத்தின

கொழும்பு, மார்ச் 19

இலங்கையின் வடக்கே மோதல்கள் இடம்பெற்றுவரும் வன்னிப் பகுதியிலுள்ள மக்களின் மோசமான நிலை குறித்து பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் கடும் அச்சம் வெளியிட்டுள்ளன.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் உரையாற்றியபோதே மேற்படி நாடுகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டிப் பேசின.

இலங்கையில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் நிலைமை சுவிற்ஸர்லாந்திற்கு கவலையளிக்கும் விடயமாக உள்ளது என அந்த நாட்டின் பிரதிநிதி முயூரியல் பேர்செட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெயர்ந்தோரின் நிலை மோசமடைவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரையும் மனிதாபிமானச் சட்டங்களை மதிக்குமாறு சுவிற்ஸர்லாந்து கேட்டுக் கொள்கிறது எனவும் அவர் சொன்னார்.

படுகொலைகள் மற்றும் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுதல் போன்றவற்றைத் தடுத்து நிறுத்துவது மற்றும் இதில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதில் இலங்கை அரசுக்கு உள்ள கடப்பாட்டையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சியில் சிரேஷ்ட தலைவர் பதவி புதிதாக உருவாக்கப்படும்

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நேற்றுக் கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் 'சிரேஷ்ட தலைவர்' எனும் பதவியை உருவாக்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தலைமைத்துவத்துக்கும் புதிதாக உருவாக்கப்பட்ட பதவி வகிப்பவருக்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)



## 'உதயன்' ஆசிரியர் வித்தியாதரன் கொழும்பு நீதிமன்றில் நேற்று ஆஜர்

### அவரை தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, மார்ச் 19

'உதயன்','சுடர்ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் ந.வித்தியாதரன் கொழும்பு குற்றவியல் பிரிவினரால் நேற்று கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சமீபத்தில் கொழும்பில் புலிகள் விமானத் தாக்குதல் நடத்திய தினத்தன்று ஆசிரியர் வித்தியாதரன் தொலைபேசியில் உரையாடியமை தொடர்பாக, அவர் கைதுசெய்யப்பட்ட தினத்திலிருந்து - அதாவது கடந்த மாதம் 26ஆம் திகதிமுதல்- அவரை மூன்று மாதங்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்குச் சென்று பார்வையிட ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 19

வன்னிக்கு - கிளிநொச்சி முல்லைத்தீவுப் பகுதிகளுக்குச் செல்வதற்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவிற்கு அனுமதி வழங்குவது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராஜதந்திரிகள், மனிதாபிமானப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்ற தரப்பினர் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ள பகுதிக்குச் செல்வதற்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவிற்கு அனுமதி வழங்குவது பற்றிய பேச்சுகள் இடம்பெறுகின்றன என வெளிவிவகார அமைச்சக (16 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' ஆசிரியர் விடயத்தில் தலையிடுமாறு மனித உரிமைக் கவுன்ஸிலிடம் கோரிக்கை

### எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் என்.வித்தியாதரன் மற்றும் பத்திரிகையாளர் ஜே.எஸ் திஸநாயகம் விடயத்தில் உடனடியாக தலையிடுமாறு எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலைக் கோரியுள்ளது.

மேலும் இலங்கையின் நிலைவரம் தொடர்பாக உடனடியாகக் கூடி ஆராயுமாறும் அந்த அமைப்பு மனித உரிமைகள் கவுன்ஸிலைக் கேட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றமை குறித்து இரு கட்டுரைகளை எழுதியமைக்காக திஸநாயகம் ஒன்றரை வருடங்களாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகை ஆசிரியர் என் வித்தியாதரன் பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவராலும் அவரது பணியாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடல்களை ஆராய்வதன் மூலம் அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புள்ளது என காண்பிப்பதற்கு அதிகாரிகள் முயல்கின்றனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் சமீபத்தைய பேட்டியொன்றில் பாதுகாப்புச் செயலாளர், வித்தியாதரன் குறித்து தெரிவித்த கருத்துகள் குறித்தும் அந்த அமைப்பு அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

## 5 வருடத்துக்குள் கொழும்பு வந்தோருக்கு எதிர்வரும் சனி, ஞாயிறு பொலிஸ் பதிவு

கொழும்பு, மார்ச் 19

கடந்த ஐந்து வருடங்களுக்குள் மேல் மாகாணத்தில் வந்து குடியேறியுள்ளவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் சனி, ஞாயிறு (21,22,) ஆகிய தினங்களில் மீண்டும் நடைபெறவுள்து என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடந்தபோதே அவர் இதனைக் கூறினார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் இது குறித்து மேலும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் பேரழிவைத் தடுக்க ஐ.நா. உடன் தலையிட வேண்டும்

### மோதல் நடைபெறும் பகுதிக்குச் செல்ல அனுமதி தேவை எனவும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

இலங்கையின் வன்னிப் பகுதியில் உருவாகியுள்ள பேரழிவை தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸில் உடனடியாகத் தலையிட வேண்டும் என சர்வதேச அமைப்புகள் பல கோரிக்கை விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் (16 ஆம் பக்கம் பார்க்க)

தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே

## பாதுகாப்பு வலயத்தில் தொண்டுகள் செய்த 'கெயர்' நிறுவனப் பணியாளர் ஒருவர் பலி

கொழும்பு,மார்ச் 19

முல்லைத்தீவில் அரசு அறிவித்த மக்கள் பாதுகாப்பு வலயத்தில் கெயர் நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கொல்லப்பட்டுள்ளார் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அந்த நிறுவனத்தின் பணிகளை மேற்கொண்டு வந்த ஆர்.சபீசன் (வயது24) என்பவரே கொல்லப்பட்டுள்ளார் என அந்த நிறுவனம் தெரிவித்தது.

ஷெல் தாக்குதல் காரணமாக அவரது காலில் காயம் ஏற்பட்டதாகவும் போதிய மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தால் அவர் மரணம் ஆனார் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பலவந்தமாகத் தடுத்து வைத்துள்ள பொது மக்களை அரச பகுதிக்கு வருவதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும்

### அமைச்சர் யாப்பா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 19

புலிகள் தாமாகவே ஆயுதங்களைக் களையாவிட்டாலும் பரவாயில்லை. அவர்களை எமது படையினர் கவனித்துக் கொள்வார்கள். புலிகள் பலவந்தமாகத் தடுத்து வைத்துள்ள மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர இடமளிக்க (16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் நேற்றுப் புறப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

கொழும்பில் இடம்பெறும் தமிழ்த் தேசிய தினப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் நேற்று கொழும்பு பயணமானார்கள்.

இந்தப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக 105 பேர் செல்லவிருந்தனர். இவர்களில் 14 பேர் விமான மூலம் சென்றனர்.

எஞ்சிய 91 பேர் நேற்று கப்பல் மூலம் திருகோணமலைக்கு பயணமானார்கள். அவர்களை திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய மட்டப்போட்டிகள் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும், இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து செல்லும் மாணவர்களை கொழும்பில் தங்க வைக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருவர் வீதம் மாண வ தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (203-236)

# வட்டுக்கோட்டை இளைஞன் கொழும்பில் கைதானதாக ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கொட்டாஞ்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்லும் நோக்குடன் கொழும்பு சென்ற யோகலிங்கம் ஜெயகாந் (வயது 29) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 19 ஆம் திகதி பிரஸ் தாபநபர் உணவகம் ஒன்றில் நின்ற போது கைது செய்யப்பட்டார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-25)

# கல்விநிர்வாக சேவைக்கு தெரிவானவர்களுக்கு கொழும்பில் ஒன்பது மாதப் பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தரம் III க்கு நியமனம் பெறும் ஒன்பது பேருக்கு கொழும்பில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

கொழும்பில் இடம்பெறவுள்ள பயிற்சிக்கு செல்வதற்கு அவர்களுக்கு பயண ஏற்பாடுகளை யாழ்.செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஒன்பது மாதங்கள் பயிற்சிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார் என்றும் -

அதற்கு முன்பாக பயண ஏற்பாடுகளை செயலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறும் - மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு:-

கே.ஏ.சிவனருள்ராஜா - கணுக்கேணி மேற்கு, முள்ளியவளை, ஜி.டி.தேவராஜா - 'பெதல்', புலோலி மேற்கு, புலோலி, கே.மணிமாறன் - சிந்துபுரம், வட்டுக்கோட்டை, ரி.முகுந்தன் - அருணோதயம், நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை, எஸ்.தாட்சாஜினி - 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வி.வல்லிபுரம் - 10, வேம்படி றோட், யாழ்ப்பாணம், பி.ஜி.ஜோசெப் - 2ஆம் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், வை.லாவண்ஜா - 108, பிறவுண் றோட், யாழ்ப்பாணம், எஸ்.புவனேந்திரன் - சாரதா வீதி, காரைநகர் - 2. (1)

# வலிகாமத்தில் தற்காலிக இணைப்பு ஆசிரியர்களுக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தற்காலிக இணைப்பிலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளப்பட்டியல் மாகாண கல்வித்திணைக்கள கணக்காளரினால் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வலிகாம கல்வி வலய ஆசிரியர்கள் இன்று அல்லது நாளை வரவுச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து மாலை வேளையில் கையொப்பமிடுதல் மூலம் விரைவாக தங்களது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (1-7)

# தொழிற் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 19

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் வல்வெட்டித்துறை, இன்பர்சிட்டி இளைஞர், யுவதிகளுக்காக நடத்தப்பட்ட தொழில் பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இன்பர்சிட்டி கிராம அபிவிருத்தி சனசமூக நிலையப் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி இ.ரெளனத்திரி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன முன்னாள் இயக்குநர் அருட்திரு ம.இம்மானுவேல் பயஸ் அடிகளார் பிரதம விருந்தினராகவும்-

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கலாநிதி என்.யோகராஜன், கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு. கி.யோ.ஜெயக்குமார், யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் அ.சக்திவேல், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (50-9)

# முல்லைத்தீவில் படையினர் மீது புதுவகை ஆயுதங்கள் மூலம் தாக்குதல்

## படைத்தரப்பு தகவல்

கொழும்பு, மார்ச் 19

முல்லைத்தீவில் படைநடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் 11 ஆவது இலகு காலாட்படை இனங்காணப்படாத புதுவகை ஆயுதங்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளதாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளதாக அரசாங்க ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த ஆயுதம் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதாகவோ அல்லது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டு உள்நாட்டில் நவீனமயப்படுத்தப்பட்டதாகவோ இருக்கலாம் எனக் கூறும் படை அதிகாரிகள் இவ்வாறான தாக்குதலினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் இப்பகுதியில் இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை இரணைப்பாலைச் சந்தியைக் கைப்பற்றிய 58 ஆவது படையினர் தொடர்ந்தும் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்ட போது நடந்த தாக்குதலில் 28 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் 12 பேரின் சடலங்களையும் ஆயுதங்களையும் மீட்டதாகப் படையினர் தெரிவித்தனர்.

புதுமாத்தளனுக்கு 3 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மண்ணரணைக் கைப்பற்றிய 55ஆவது படையினர் அங்குள்ள மற்றுமொரு மண்ணரணைக் கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடுஞ்சமர் வெடித்துள்ளதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

# மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென 37 எம்.பிக்களைக் கொண்ட அமைப்பு உதயம்

## தலைவராக மனோகணேசன் தெரிவு

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 37 எம்.பிக்களைக் கொண்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு நேற்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. இதன் தவிசாளராக மனோகணேசன் எம்.பியும், செயலாளராக ஜயலத் ஜயவர்தன எம்.பியும், பொருளாளராக ஹஸன் அலி எம்.பியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பு கட்சி பேதங்களைக் கடந்தது என்றும் அரசுக்கு எதிரானது அல்ல என்றும் இந்த அமைப்பின் பொருளாளர் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் கடத்தல், கப்பம் கோரல், கொலை உள்ளிட்ட பல தரப்பட்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைக்கு எதிராக இந்த அமைப்பு நடவடிக்கைகளை எடுக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, வன்னி மக்களின் நிலைமை தொடர்பாகவும் இந்த அமைப்பு கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

# சுழிபுரத்தில் இன்று நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகர் பதிவுக்குட்பட்ட பகுதியில் இலவச நடமாடும் சேவை மூலம் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இன்று தொல்புரம், மூளாய், பொன்னாலை ஆகிய இடங்களில் பொது நிலையங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளதாக சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த ஊசி போடுவதன் மூலம்மக்கள் விசர்நாய்க்கடி நோய் ஏற்பட்டு மரணமாவதைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவித்தார். (1-21)

# அரிசியின் விலை 5ரூபாவால் குறைப்பு என அரசு அறிவிப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் நாட்டரிசி, பச்சையரிசி ஆகியவற்றின் விலைகள் 1கிலோ- 65 ரூபாவில் இருந்து 60ரூபாவாக குறைக்கப் பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் நுகர்வு விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் உணவுப் பொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக நடந்த அமைச் சரவைத் தீர்மானக் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாக கூறிய அமைச்சர் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரிசிகளை விற்பனை செய்யாத வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் சோதனைகளை நடத்தி அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பர் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (06)

# முல்லைத்தீவிலிருந்து பதவியாவுக்கு கூட்டிச்செல்லப்பட்ட காயமுற்றோரை ஆஸ்பத்திரியில் பார்வையிட்டார் அமைச்சர்

வவுனியா, மார்ச் 19

வன்னிப் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் காயமடைந்த பொதுமக்களை சமூக சேவைகள் மற்றும் சமூக சலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விஷேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றுப் புதன் கிழமை பதவியா மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்று நேரில் பார்வையிட்டார்.

மோதல்கள் காரணமாக வன்னிப் பகுதியிலிருந்து மேற்படி காயமடைந்த பொது மக்கள் கடல் மார்க்கமாக புல்மோட்டைப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து பதவியா நகருக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாக சுமார் 70 பேர் வரையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக்காலை வவுனியா சைவப்பிரகாசர் மகாவித்தியாலயத்தில் அமையப்பெற்றுள்ள நலன்புரி நிலையத்திற்குச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அம்மக்களது குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் அம்மக்களின் கோரிக்கைகளை ஆராயும் முகமாக தனது பிரதி நிதிகளை அங்கு நியமித்து விட்டு உடனடியாக பதவியா நகருக்குச் சென்றார்.

காயமடைந்து பதவியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மக்களின் உறவினர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் நலன்புரி நிலையத்திற்கு முதலில் விஜயம் செய்த அமைச்சர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களது பல் வேறு பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன் அந்த மக்களது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு வருவதாகவும் உறுதியளித்தார்.

இதன் பின்னர் பதவியா மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களை தனித் தனியாகச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

நோயாளர்களுக்கு உடுதுணிகள், தேநீர்க் கோப்பை மற்றும் உணவுத் தட்டுக்கள் என்பவற்றை வழங்கியதுடன் விரைவில் அவர்களை வவுனியாவிற்குக் கொண்டு வர இயலும் என்றும், வவுனியா வந்ததன் பின்னர் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.


**விற்பனைக்கு**

சிறுவர் அரங்கு

சிறுவர் நாடக நூலானது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவன் குழந்தைவேல் சிவகுமார் அவர்களால் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

இந்நூல் பூபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), அன்னை (யாழ்ப்பாணம்), சிறிலங்கா (யாழ்ப்பாணம்), BOOK LAB (திருநெல்வேலி) பிரபல புத்தகசாலைகளில் விற்பனைக் குண்டு. ... கற்கின்ற சகல மாணவர்களுக்கும் உதவக்கூடியது.

தொடர்பு:-0779036898, 0774018359.


# மரண அறிவித்தல்

## பூலோகம் நாகராசா



பழைய தாபாற்கந்தோர் அருகாமை, கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூலோகம் நாகராசா நேற்று (18.03.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூலோகம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வரும், ராஜபூபதியின் அன்புக் கணவரும், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் யோகராசா, தனபாக்கியாஸ்வரி, புவனேஸ்வரி (ஆசிரியை, யாழ். கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை), ஸ்ரீஸ்கந்தராசா (ஆசிரியர், யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லலிங்கம், மங்களேஸ்வரி, தேவகெளரி (ஆசிரியை, யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி), ராசா, சிவகுமாரன்(கோப்பாய் தபாலகம்), கமலாம்பிகை(ஆசிரியை, யாழ். வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2009) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி, பழைய தபாற்கந்தோர் அருகாமை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யாரோடு நோவோம்.......?!

இரகசியம் என்றோ ஒரு நாள் பரகசியம் ஆகும் என்று பேச்சு வழக்கில் கூறப்படுவது உண்டு. இன்றைக்கு நீ இரகசியமாக வைத்திருக்க முயல்வது என்றோ ஒரு நாளைக்கு வெளியே தெரியவராமலா போகும் என்று விடயங்களை மூடிமறைக்க முயல் வோரைப் பார்த்து உண்மை அறிய விரும்புபவர்கள் நையாண்டியாகக் கேட்பதுமுண்டு.

இலங்கை விவகாரத்தில் இந்தியா வெளிப்படுத்த விரும்பாமல், மறைத்து வைத்திருந்த, இரகசியம் பேணிய விடயம், கொழும்பு நாடாளுமன்றத்தில் பரகசியப்படுத்தப்பட்டுவிட்டது. சபை முதல்வரும் சுகாதார அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உண்மையைக் கட்டவிழ்த்துவிட்டார்.

இந்திய வைத்தியர்களின் வருகை குறித்து ஜே.வி.பி. தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபத்துக்கும் கண்டனத்துக்கும் பதிலளிக்கப் போய் அமைச்சர் சிறிபால, பையிலிருந்த பூனையை வெளியே ஓட விட்டிருக்கிறார்.

ஆம். இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கி வரும் பெரும் - பென்னம்பெரிய - ஒத்துழைப்பினாலேயே விடுதலைப் புலிகளை, அவர்களின் பயங்கரவாதத்தை- இந்த அளவுக்கு ஒழித்துக் கட்ட முடிந்தது என்று அந்த நாட்டுக்கு நன்றிக் கடன் செலுத்தும் பாங்கில் புகழாரம் சூட்டினார் இலங்கையின் பொறுப்புவாய்ந்த மூத்த அமைச்சர்.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைக்கு இந்திய அரசு தொடர்ந்து வழங்கிவரும் உதவிகள் அளவிடமுடியா தவை என்றும் அமைச்சர் சிறிபால டி சில்வா கூறியிருக்கிறார்.

இலங்கை விவகாரத்தில், ஈழத் தமிழர்களின் பிரச்சினையில், இந்திய மத்திய அரசு தமிழகத் தலைவர்களுடன் எப்படி ஒளித்துப்பிடித்து விளையாடியது; விளையாடி வருகிறது என்பதனை மிகத் தெளிவாகக் காட்சிப்படுத்துகின்றன சில்வாவின் புகழார விவரணங்கள்!

இவை நாடக அரங்கக் காட்சிகள் போன்று ஈழத் தமிழர்களின் மனக் கண்கள் முன் என்றும் நினைவுக்கு வந்து நிழலாடும் என்பதனைச் சொல்ல வேண்டிய தில்லை.

ஈழத் தமிழர் விடயத்தில், அரசியல், இராணுவ சார்பானவற்றைத் தவிர்த்தாலும்கூட, வன்னியில் தமிழர்கள் செத்தொழிவதையும் அவர்களது ஏனைய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் களைவதில்கூட, இந்திய மத்திய அரசு அதனைத் தடுக்க மனமார்ந்து முயற்சிக்காமல் ஒளித்துப்பிடித்து விளையாடுவதை இந்தப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டி விட்டோம்.

வன்னியில் - முல்லைத்தீவில் - போரில் சிக்குண்ட மக்களின் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தைப் போர் நிறுத்தம் செய்யுமாறு வெளி வெளியாக, உத்தியோகபூர்வமாக எழுத்தில் வற்புறுத்தாமல், செய்தியாளர்களிடம் கூறுவதும், மகாநாட்டில் பேசுவதுமாக அமைச்சர் பிரணாப் முகர்ஜி காலங் கடத்தி, தமிழகத்தில் எழுந்த ஈழத்தமிழர் ஆதரவையும் அதனால் அங்குள்ள அரசியல் தலைவர்கள் கொடுத்த அழுத்தங்களையும் கரைத்து விடுவதற்கு கைக்கொண்ட உபாயங்கள் எல்லாவற்றுக்கும் அத்திபாரமான காரணங் களின் மூலத்தை அமைச்சர் சிறிபால டி சில்வா - (இலங்கை அரசாங்கம்) நெல்லிக்காய் மூடையைக் கட்டவிழ்த்து விட்டு ''கையில் எடுத்துக்'' காட்டியிருக் கிறார்.

இன்னொரு புறமாக - அடுத்த பக்கமாக- நோக்கினால் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் வட இந்தியத் தலைவர்கள் காலில் போட்டு மிதித்துவிட்டனர்! மனிதாபிமான உதவி என்ற பெயரில் மருந்துப் பொருள்களையும், டாக்டர்களையும் அனுப்பினால் இந்தியாவின் பங்கு முடிந்தது என்று எண்ணுமளவுக்கே அதன் இரண்டாம் தரச் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

காந்தி, நேரு, இந்திரா போன்ற மாண்புமிகு அரசியல் தலைமைத்துவங்கள் போன்று, இப்போதும் சரி இனி எப்போதும் சரி வட இந்தியத் தலைமைத்துவங்களை எதிர்பார்க்க முடியாது என்பதும் கல்லில் எழுத்துப் போல் கருதப்படவேண்டிய காலமாகிவிட்டது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதென்ற சித்தாந்தத்தில் - செயற்பாட்டில் - அரசுகள் என்ற வகையில் இலங்கை யும் இந்தியாவும் ஒரே கோட்டில் பயணிக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் இந்தியாவின் பிரதான மாநிலங்களில் ஒன்றான தமிழகத்தின் தொப்புள் கொடி உறவுகள் போரினால் இலங்கையில் மாண்டு மடிந்து கொண்டிருக்கும்போது, மத்திய அரசு அதனை மனிதாபிமானக் கண்ணோடு பார்க்காமல் தனது அரசியல் மற்றும் செல்வாக்குச் செலுத்துதலை முதன்மைப்படுத்திச் செயற்படுகிறது என்று பல தரப்புகளும் ஊகித்தது உண்டு. அதனை இந்திய மத்திய அரசு மூடிமறைத்து தனது அரசியல் மற்றும் ராஜதந்திர சாணக்கியத்தை செய்து முடித்திருக்கிறது!

இலங்கை அரசுக்கு இந்திய அரசாங்கம் இராணுவ - ஆயுத - உதவிகளைச் செய்து வருவது ஏற்கனவே மெல்ல மெல்லக் கசிந்த விடயமே. ஆனால் மத்திய அரசு அது குறித்து வெளிக்காட்டாமல் தனது காரியங் களை ஆற்றி வந்தது. இலங்கைக்குக் கடன் உதவி வழங்குவதாக மட்டுமே புதுடில்லி அரசு கூறிவந்தது. ஆனால் அதற்கும் மேலாக நேரடியாக ஆயுத உதவி, மற்றும் பண உதவி செய்வது சில நாள்களுக்கு முன்னர் வெளிப்பட்டது.

பிரதமர் மன்மோகன்சிங் தமக்கு எழுதிய கடிதத்தில் இலங்கைக்கு இந்தியா ஆயுதங்களை வழங்கியதாகக் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு பண உதவி செய்வதாகவும் தெரிவித்திருந்தார் என்று வைகோ சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இந்த இலட்சணத்தில், இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் போரில் மடிவதைத் தடுக்க தமிழகத் தலைவர்களின் செல்வாக்கு புதுடில்லியில் செல்லாது என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது! அது இப்போது இலங்கை நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டும் விட்டது.

இதற்கு யாரொடு நோவோம்....?

# இலங்கை வரும் ஐரோப்பிய ஒன்றியக் குழு இடம்பெயர்ந்த மக்களைப் பார்வையிடலாம்

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவையுத்த பாதுகாப்பு வலயங்களுக்கு சென்று முகாம்களில் உள்ள மக்களை பார்வையிட அரசு அனுமதி வழங்குமென இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன ஏ.எப்.பி.செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார்.

விஜயம் செய்யும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினர் முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்களை சென்று பார்வையிட்டு அம்மக்களின் நிலைப்பாடு மற்றும் நிலைவரம் தொடர்பிலும் ஆராயலாம் எனவும் பாலித ஹோகன்ன தெரிவித்தார்.

தற்பொழுது இது தொடர்பான விடயங்களில் இறுதித் தீர்மானம் எடுப்பதிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் திகதிகளை தீர்மானிப்பதிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்ன ஏ.எப்.பி.செய்திச் சேவைக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவொன்று வெகுவிரைவில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார தொடர்பு ஆணையாளர் பெனிட்டா பெரார் ஊடகவியலாளரிடம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# வவுனியா நலன்புரி நிலையங்களில் 6 நடமாடும் சிகிச்சை நிலையங்கள்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்கியுள்ளது

முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் உள்ள நலன்புரி நிலை யங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் செஞ்சி லுவைச் சர்வதேசக்குழு சுகாதார அமைச்சுக்கு 6 நடமாடும் சிகிச்சை நிலையங்களை வழங்கியுள்ளது.

கொள்கலன் பெட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிகிச்சை நிலையங்களை சுகாதார அமைச்சரின் கோரிக்கைக்கு அமைய செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பிரிவின் பிரதிப் பணிப்பாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவில் இருந்து அழைத்துச் செல்லப்படும் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான மருந்து உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையை சூழவுள்ள மருத்துவமனைகளில் முல்லைத் தீவில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மருத்துவமனைகளுக்கு இந்த மருந்து பொருள்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

# விடுமுறைக்கால விடுதி; காலி ஓய்வூதியர் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.19

நுவரெலியாவில் றம்பொட எல்ல என்ற இடத்தில் அரச ஓய்வூதியர்களுக்கென விடுமுறை கால விடுதி அமைக்கும் ஓய்வூதியர் திணைக்களத்தின் தீர்மானத்தைக் காலிப்பகுதியைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் எதிர்த்துள்ளனர்.

காலியில் அண்மையில் நடை பெற்ற ஓய்வூதியர் சங்கத்தின் கூட்டமொன்றில் இது தொடர்பாகத் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன் அறிவித்தலின்றி ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தில் மாதம் 50 ரூபா வீதம் பெப்ரவரி மாதத்திலிருந்து அறவிடுவதற்குத் திணைக்களம் தன்னிச்சையாகத் தீர்மானித்திருப்பதாக மேற்படித் தீர்மானத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்காக மிகக் குளிரான ஒரு பகுதியில் விடுமுறைகால விடுதி அமைப்பது பொருத்தமில்லை. அது நடைமுறைச்சாத்தியமற்ற முயற்சி என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# திருநகரிலுள்ள நலன்புரி நிலையத்தில் நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச்.19

விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள திருநகர் நலன்புரி நிலையத்தில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றது.

இந்த நடமாடும் விற்பனை நிலையம் வாரத்தில் மூன்று நாள்கள் செயற்பட்டு வருகின்றது.

நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களின் அத்தியாவசிய சேவையைக் கருத்திற் கொண்டே இச் சேவை நடைபெறுவதாகச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந்த முகாமில் தங்கியிருக்கும் 114 குடும்பங்கள் இந்த நடமாடும் விற்பனை நிலையம் மூலம் தமக்குரிய அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் பெற்றுக்கொள்வதைக் காணமுடிந்தது. (50-224)

# வல்வெட்டித்துறை அ.மி.த.க பாடசாலையின் மாடிக் கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச்19

'நிக்கொட்' நிறுவனத்தின் 'கார்ப்' திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

'நிக்கொட்' நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் த.லங்காநேசன் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய மாடிக் கட்டடத் தொகுதியினைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு 'நிக்கொட்' நிறுவனத்தின் 'கார்ப்' திட்டத்தின் கீழ் 125 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக்கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன. கடந்த மாதம் இந்தக் கட்டடப் பணிகள் நிறைவடைந்ததையடுத்து கட்டடம் திறந்து வைக்கப்படுகின்றது. (50-9)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 07 | 20.03.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | பூராடம் |
| | மு.ப. 09.07வரை |
| நட்சத்திரம்: | சித்தம் |
| | பி.ப.3.49 வரை |
| சுபநேரம்: | 06.17 - 07.47 |
| ராகுகாலம்: | 10.47 - 12.17 |

# திருமலையில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச்19

யாழ்.குடாநாட்டுக்கான 66 தபால் பொதிகள், கடந்த ஒரு வாரகாலத்திற்குப் பின்னர் திருகோணமலையிலிருந்து நேற்று புதன்கிழமை பயணிகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டுக்கும், வெளியிடங்களுக்குமான தபால் சேவைகள் திருகோணமலை - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் மூலம் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

முல்லைத்தீவிலிருந்து காயமடைந்தோரைத் திருகோணமலைக்கு ஏற்றிச் செல்ல, இப் பயணிகள் கப்பல் சேவை பயன்படுத்தப்படுவதால் திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவை ஒழுங்காக நடைபெறவில்லை. இதனால் தபாற் சேவைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் தேங்கியுள்ள தபால் பொதிகளில் 66 தபால் பொதிகள் நேற்று புதன்கிழமை எடுத்துவரப்பட்டன. மிகுதியாக இன்னமும் 417 தபால் பொதிகள் எடுத்துவரப்படாமல் தேங்கியுள்ளன. கடந்த 9 ஆம் திகதிக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் தபால் பொதிகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

இதேவேளை கடந்த 9 ஆம் திகதிக்குப் பின்னர் அடிக்கடி மிகமிகச் சொற்பளவு தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து விமானம்மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் மிகப் பெரிய அளவில் பொதி செய்யப்பட்ட 35 தபால் பொதிகள் யாழ்.பிரதம தபாலகத்தில் தேங்கியிருப்பதாகவும் அவற்றைக் கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-236)

# யாழ்,மாவட்ட தபாலகப் பணிகள் இப்போது கணனி வலைப்பின்னலில்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நாடு முழுவதும் உள்ள தபாலகங்களில் விரைவில் கணனி வலைப் பின்னலில் இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அஞ்சல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. யாழ்.மாவட்டத்திலும் வலைப் பின்னல் ஊடாக மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தபாலகங்கள் கணனி மயப்படுத்தப்படுவதன் மூலம் மின் அஞ்சல், காசுக்கட்டளை சேவையை ஆரம்பிக்க முடியும் என்றும் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக தபால் ஊழியர்களுக்கு கணனி சம்பந்தமான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தை நாடு முழுவதும் ஒரே சமயத்தில் விரைவில் ஆரம்பித்து வைக்கவும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தை யாழ்.மாவட்டத்திலும் விரைவில் ஆரம்பித்து வைப்பதற்கும் அஞ்சல் திணைக்களத்தினால் 50 கணனிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தத் கணனிகளை அனுப்பி வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கணனி வலைப்பின்னல் ஊடான மின் அஞ்சல் காசுக்கட்டளை சேவை மூலம் மக்கள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் உயர்ச்சிக்கு வாழ்த்துக்கள்





எமது கல்லூரியின் ஆசிரியர்கள்
நா.மனோரஞ்சிதன் அவர்கள்,
ஆசிரியர் கல்வியியலாளர் தரம் 3இற்கும்
திருமதி அ.கி.வலன்ரைன் அவர்கள் கல்வி
நிர்வாக சேவை - கணிதம் தரம் 3இற்கும் உயர்ச்சி
பெற்றமை கண்டு உவகையுறும் அதேவேளை
வரும் காலங்களிலும் தம் சேவையில் உயர்ச்சி
கண்டிட வாழ்த்தி நிற்கிறோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**


# 4 வருடங்களில் அரசு பெற்ற கடன் 2 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபா!



கொழும்பு, மார்ச் 19

2004ஆம் ஆண்டு முதல் 2008 வரையிலான நான்கு வருட காலப்பகுதியில் மாத்திரம் இலங்கை அரசு பெற்றுள்ள மொத்தக் கடன் இரண்டு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபா என்று ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற முகாமைத்துவத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சி எல்லாத்துறைகளையும் பாதித்துள்ளது. எமது ஆட்சிக்காலத்தில் நாடு முழுவதும் 752 ஆடைத் தொழிற்சாலைகள் இருந்தன. இப்போது 225 தான் உண்டு.

சுற்றுலாத்துறை, ஆடைத்தொழில், தேயிலை உற்பத்தி அனைத்தும் வீழ்சியடைந்துள்ளன. பெந்தோட்டை கடற்கரையில் இப்போது ஒருவெள்ளைக் காரரைக் கூட பார்க்க முடியாதுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி, வீழ்ச்சியடைந்திருப்பதன் காரணத்தால் இலங்கைக்கான அந்நியச் செலாவணி 25 வீதத்தால் குறைந்துள்ளது.

இந்த நிலைமையால் அரசைக் கொண்டு நடத்த அரசிடம் பணமில்லை. இதனால் வெளிநாட்டு நாணய நிதியத்திடம் அரசு19 ஆயிரம் கோடி ரூபாவை கடனாகப் பெறத் திட்டமிட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன்களைப் பெறப் போவதில்லை என்று சர்வதேச நாணய நிதியம் உட்பட பல வெளிநாட்டு நிதி நிறுவனங்களை இங்கிருந்து விரட்டியடித்த இந்தஅரசு இப்போது அந்த நிறுவனங்களை மாலை போட்டு வரவேற்கின்றது.

சுதந்திரம் அடைந்தது முதல் 2004 ஆம் ஆண்டுவரை இலங்கை பெற்றிருந்த மொத்தக் கடன் ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 300கோடி ரூபாவாகும்.

ஆனால் இந்த அரசு 2004 முதல் 2008 வரையிலான நான்கு வருட காலப்பகுதியில் மாத்திரம் பெற்ற மொத்த கடன் 2லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவாகும். அரசு எந்தளவுக்குக் கடன்பட்டுள்ளது என்பது இதன் மூலம் துலங்குகிறது - என்றார்.

(அ-சி)


## விற்பனைக்கு

உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பாவனையிலுள்ள மிகக் குறுகிய தூரம் ஓடிய யமகா (Yamaha News Mate) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. S.இராமலிங்கம், நாவலர் மடம் பாடசாலை எதிரில், பருத்தித்துறை பிரதான வீதி, கரவெட்டி. பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு பி.ப. 4-5 மணி வரை மட்டும். (சி/557570)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பஹிரா புறொயிலர் குஞ்சுகள் இன்று (19.03.2009) வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

*றாஜீவ் - நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (83605)


## கடத்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்

கடந்த7ஆம்திகதி கொழும்பு விடுதி ஒன்றில்வைத்து கடத்தப்பட்ட சுதுமலை வாசி விடுவிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுதுமலை தெற்கு, எச்சாட்டி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்சன் (வயது 26) என்பவர் வெளிநாடு செல்லும் நோக்குடன் சென்றல் வீதியில்உள்ள கனிலொட்சில் தங்கியிருந்த வேளை இனம் தெரியாத கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் கடந்த 16 ஆம் திகதி அன்று இரவு அக்கும்பலால் கொழும்பில் விடுவிக்கப்பட்டுள்ளார் என யாழ்.ம.உ. ஆ.குழு அலுவலகத்திற்கு [illegible] யப்படுத்தியுள்ளனர்.


Micro System Development Centre
Jaffna Road, Manipay

Our Services
→ Computer Sales & Repairing
→ Software Developing
→ Web Developing & Networking
→ Graphics Works & Vedio Editting
→ Typing, Scanning & Printing
→ Animation Works

Lab Top கணனி வகைகளும் திருத்தப்படும்

Computer Games Centre

Computer Classes

பாடசாலை மாணவர்களுக்கான

Ms Office, DTP, VB & VB.Net, Hardware, Net Working, Flash, ICT, GIT

மற்றும் சிறுவர்களுக்கான கணனி வகுப்புக்கள் என்பன ஆரம்பமாகின்றன
பதிவுகளை முன்னரே மேற்கொள்ளவும்.
ஆரம்பத்திகதி உ 30.03.2009

Vacancy
Post - Software Developer
Age - 18 - 28
Qualification - VB, VB.Net
Closing Date - 28/03/2009

Mail Add : mail@msdcjaffna.com
msdcjaffna@yahoo.com
Tele Phone No - 060 2218462
077 2487082
077 9560477


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா சிவராசா



கண்டாவத்தை, கரவெட்டி மத்தி, கரவெட்டியை வதிவிடமாகக் கொண்ட பொன்னையா சிவராசா நேற்று (18.03.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா- பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வல்லிபுரம்- சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கோபாலகிருஷ்ணனின் (கனடா) அன்புச் சகோதரனும் பகீரதன் (கனடா), சுஜாதா (ஜேர்மனி), வசீகரன், சுனித்தா (கொழும்பு), சுகிர்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா (கனடா), சுதா (ஜேர்மனி), உதயராஜா (உதயன் VDO, கொழும்பு), திருக்குமார் (இலங்கை போக்குவரத்துச்சாலை, பருத்தித் துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுரன், விசாத், விசாகன், நிலோஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2009) வியாழக்கிழமை பி.ப.4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டாவத்தை,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னப்பா தியாகராசா



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா தியாகராசா நேற்று (18.03.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் தவரஞ்சிதத்தின் (கனடா) அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியத்தின் (K.S.S) அன்பு மாமனாரும் வாசுகி, சுபாஜினி, கமலாஜினி, சுதாகரன், சுவிஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தம்பிஐயாவின் மைத்துனரும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்பு மைத்துனரும் தவபாலசிங்கம், குணபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், தனபாலசிங்கம், சிவபாலசிங்கம் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
செ.குணபாலசிங்கம் (குணம்),
செ.தனபாலசிங்கம் (கிளி).

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும்
திருமதி இ.மோகனேஸ்வரனின் தாய்
**திருமதி விசாலாட்சி நாகலிங்கம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வங்களாவடி முருகப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை வடக்கு,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
வேலணை. (83630)

பரிபாலன சபையினர்,
வேலணை வங்களாவடி முருகன் ஆலயம்.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா பொன்னம்பலம்



காரைநகர், அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பொன்னம்பலம் 16.03.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சவுந்தரம் தம்பதியினரின் அன்பு மகளும் கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் ரதிதேவியின் (ஆசிரியை, வவுனியா, ரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) அன்புத் தாயும் சிவகுமாரின் அன்பு மாமியும் சங்கவி, சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2009) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

110, குட்செட் றோட்,
வவுனியா.

தகவல்:
மகள் (ரதி).

# மரண அறிவித்தல்

## கந்தசாமி ஸ்ரீதரர்



கந்தர்மடம் இல. 1A, அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.50/18, வைமன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி ஸ்ரீதரர் (லக்ஸ்பிறே ஸ்ரீ/கண்ணன்) 17.03.2009 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நித்தியபாக்கியத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற தோமஸ் மற்றும் பிரகாசியம்மாவின் அன்பு மருமகனும் லதாவின் அன்புக் கணவரும் சாம்பவி, சாமந்தி (தரம் 9 மாணவிகள், யா/இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீசாரங்கன் (தரம் 6 மாணவன், யா/மத்திய கல்லூரி), ஸ்ரீசாதுசன் (தரம் 4 மாணவன், யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் க.ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் பிரபானந்தரூபி, நகுலான்ந்தரூபி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சற்குணாநந்தன், தவசீலன் ஆகியோரின் மைத்துனரும் லாவென்னியா (மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை 2009 கலை) வின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.03.2009) இல.1A, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 1A, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (83634)

தகவல்:
லதா (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 7 கிரிக்கெட் வீரர்கள்

## இவர்களுக்கான பயிற்சிமுகாம் அடுத்த மாதம் கொழும்பில்

யாழ்ப்பாணம்,மார்ச்19

அரவிந்த டீ சில்வா துடுப்பாட்ட நிதியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளிலிருந்து ஏழு சிறந்த வீரர்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பதினாறு பாடசாலைகளிலிருந்து எழுபது துடுப்பாட்ட வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட வீரர்களிடையேயான 'ருவென்ரி - 20' துடுப்பாட்டப் போட்டி மூன்று தினங்களாக யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்று இறுதிப்போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கைத் துடுப்பாட்ட அணியின் தேர்வுக் குழுத்தலைவரான அரவிந்த டீ சில்வா மூன்று தினங்களாக நடைபெற்ற போட்டிகளிலிருந்து சிறந்த வீரர்களைத் தெரிவு செய்தார். தெரிவுசெய்யப்பட்ட வீரர்களின் விவரம் வருமாறு:

* எஸ்.எஸ்.மிலாண்டோ ஜெனிபர் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).
* ஏ.விதுஷன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).
* பி.ஹரிவர்த்தனன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).
* ஆர்.கஜிபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).
* பி.கபில்தேவ் (மகாஜனக் கல்லூரி)
* கோபிகாந்த் (யாழ்.மத்திய கல்லூரி).
* எட்வேர்ட் எடின் (யாழ்.மத்திய கல்லூரி).

இந்த வீரர்கள் அடுத்த மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள சிறப்புப் பயிற்சி முகாமில் பங்குபற்றுவர். இந்தச் சிறப்புப் பயிற்சி முகாமிலிருந்து தேசிய மட்டத்திற்கு வீரர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

'ருவென்ரி - 20' இறுதி ஆட்டத்தின் சிறந்த பந்துவீச்சாளனாக சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விதுஷனும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கபில்தேவும் தெரிவுசெய்யப்பட்டனர். சிறந்த ஆட்ட நாயகனுக்கான விருது யாழ்.மத்திய கல்லூரி வீரன் எட்வேட் எடினுக்கு வழங்கப்பட்டது.

'கொக்கக் கோலா' நிறுவனம் இந்த வீரர்களைத் தெரிவுசெய்யும் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

யாழ்.நகர கட்டளைத் தளபதி பிரிகேடியர் றுவன் குலதுங்க தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார். (50-120)

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான நேர அட்டவணை தயாரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் வசந்த எழுச்சி விழாவை முன்னிட்டு நடத்தப்படவிருக்கும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான நேர அட்டவணையைத் தயாரிப்படுத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் தங்கள் பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-204)



கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்ற அல்வாய் மனோகரா விளையாட்டு வீராங்கனைகள், கழகத் தலைவர், பயிற்சியாளருடன் காணப்படுகின்றனர். (படம்: சுந்தா)

# வசந்த எழுச்சி விழாவையொட்டிய தாச்சிச் சுற்றுப்போட்டி ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ்.மாவட்ட வசந்த எழுச்சி விழாவை முன்னிட்டு மாவட்டத் தாச்சிச் சங்கம் நடத்தும் பெண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை இந்தப் போட்டிகள் நடைபெறும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

சாந்தை விநாயகர் வி.க., மயிலிட்டி 'நியூகிற்' வி.க., சண்டிலிப்பாய் ஸ்ரீ அம்பாள் வி.க., மயிலிட்டி ஒற்றுமை வி.க., இணுவில் அண்ணா வி.க., அளவெட்டி பாரதி வி.க., சுன்னாகம் 'யுத்ஸ்ரார்' வி.க., பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க., அளவெட்டி உதய தாரகை வி.க. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பருத்தித்துறை சென்.தோமஸ் வி.க. சம்பியன் பெற்று 'ஹட்ரிக்' சாதனை

யாழ்ப்பாணம்,மார்ச்19

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகச் சம்பியனாகி ஹட்ரிக் சாதனை படைத்துக் கேடயத்தைக் கைப்பற்றியது.

அல்வாய் மனோகரா வி.க. மைதானத்தில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் அதிக புள்ளிகளைப் பெற்று இவ்வருடச் சம்பியனாகியது.

பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் சி.சத்திய சீலன் கலந்துகொண்டு வெற்றி வீர, வீராங்கனைகளுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார்.

தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் இக்கழகம் பிரதேசச் சம்பியனாகியமைக்காக ஹட்ரிக் சாதனைக் கேடயமும் வழங்கப்பட்டது. (50-207)

# பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி முடிவுகள்

கரவெட்டி, மார்ச் 19

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் குழுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:

**துடுப்பாட்டம் (ஆண்கள்)**

முதலாம் இடம் - வல்லியானந்தம் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**கரப்பந்தாட்டம் (ஆண்கள்)**

முதலாம் இடம்: பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- பெருவை பாரதி விளையாட்டுக்கழகம்.

**எல்லே (ஆண்கள்)**

முதலாம் இடம் - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம்.

**கபடி (ஆண்கள்)**

முதலாம் இடம் - துள்ளுமீன் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- சென். தோமஸ் விளையாட்டுக்கழகம்.

**உதைபந்தாட்டம் (ஆண்கள்)**

முதலாம் இடம் - திக்கம் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம் - வல்வை நெடியகாடு விளையாட்டுக்கழகம்.

**துடுப்பாட்டம் (பெண்கள்)**

முதலாம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**கரப்பந்தாட்டம் (பெண்கள்)**

முதலாம் இடம் -சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடம்- நக்கீரன் விளையாட்டுக்கழகம்.

**எல்லே (பெண்கள்)**

முதலாம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்-பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**கபடி (பெண்கள்)**

முதலாம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- துள்ளுமீன் விளையாட்டுக் கழகம்.

**உதைபந்தாட்டம் (பெண்கள்)**

முதலாம் இடம் - சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம் - நக்கீரன் விளையாட்டுக்கழகம்.

**வலைப்பந்தாட்டம் (பெண்கள்)**

முதலாம் இடம் - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- நக்கீரன் விளையாட்டுக்கழகம். (50-70)

# கரவெட்டிப் பிரதேச விளையாட்டு விழா

கரவெட்டி,மார்ச்19

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2009ஆம் ஆண்டுக்கான விழையாட்டு விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்திய சீலன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக, பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டு அதிகாரி திருமதி எ.எவ்.ஜே.ரூபசிங்கமும் கலந்துகொள்வார்கள். (50-70)


நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம் மங்கள் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் பி.குகதாசன், யாழ்.மறை மாவட்ட நிதிப் பரிபாலகர் அருட்திரு ஜே.பி.அன்ரனிதாஸ், ஹற்றன் நஷனல் வங்கி சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம், யாழ்.ஆயரின் செயலாளர் அருட்திரு ஆர். றொஷான் மற்றும் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியமலர் ஜோசப் ஆகியோர் [illegible] அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் வரலாற்றில்


**மார்ச் - 13**




மௌனப் படங்களாக இருந்த திரைப்படங்கள் பேசும் படமாகத் தோற்றம் பெற்றது மார்ச் 13ஆம் திகதி 1923இல்தான். அமெரிக்காவைச் சேர்ந்த சீ டி. ஃபோரெஸ்ட் என்பவர் இதனை உருவாக்கினார்.

**மார்ச் - 14**

உலகப் புகழ்பெற்ற அரசியல் தத்துவ ஞானியான கார்ல் மாக்ஸ் 1883ஆம் ஆண்டு மார்ச் 14இல்தான் இறந்தார்.



**மார்ச் - 15**



மாவீரனாகப் போற்றப்பட்ட ரோமானியச் சக்கரவர்த்தி ஜூலியஸ் சீஸர் கி.மு. 44ஆம் ஆண்டு மார்ச் 15இல்தான் தன் நம்பிக்கைக்கு உரியவர்களாலேயே குத்திப் படுகொலை செய்யப்பட்டார்.

**மார்ச் - 16**

தன்னுடைய முதலாவது இராணுவப் பயிற்சிக் கல்லூரியை 1802ஆம் ஆண்டு மார்ச் 16இல்தான் அமெரிக்கா நிறுவியது.




**மார்ச் - 17**



குழந்தைகளுக்கான ஓவியங்களை வரைந்து புகழ்பெற்ற கேட் கிரீன்வே என்பவர் 1849ஆம் ஆண்டு மார்ச் 17இல் பிறந்தார்.

**மார்ச் - 18**

1965ஆம் ஆண்டு மார்ச் 18இல் தான் மனிதன் விண்வெளியில் நடந்த அதிசயம் நிகழ்ந்தது. இவ்வாறு விண்வெளியில் நடந்தவர் ரஷ்ய விண்வெளி வீரரான அலெக்ஸி லியோனோவ் என்பவர்தான்.



**மார்ச் - 19**



'டார்ஜன்' என்ற சிறுவர் கற்பனைப் பாத்திரத்தை உருவாக்கிய எழுத்தாளரான எட்கார் ரைஸ் பர்ரோஸ் 1950ஆம் ஆண்டு மார்ச் 19இல் இறந்தார்.

## நிம்மதியாய் துயில்வது எப்போது?

தமிழில்லை என்றால்
பேசுவதற்கு மொழியேது?
நட்பில்லை என்றால்
நகைச்சுவை குறும்பேது?

வெற்றியே வாழ்வென்றால்
வாழ்வில் சுவையேது?
தோல்விகள் தொடர்ந்துவிட்டால்
துயில்வதும் எப்போது?

விடியலைத் தேடி வரும்
விடுகதைக்கு விடையேது?
திசைகள் பல இருந்தும் – இங்கு
தீர்வுகள் கிடையாது

விட்டெறிந்த காலமும்
நினைவில் நிற்கிறது
பட்டுப்போன மரமும் – தன்
கதையைச் சொல்கிறது

துயிலும்போது கூட
தூக்கமும் நிலைபெறாது
வலியின்னும் தீரவில்லையே
இறைவா விடையேது?

தி.வைதேகி
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## புதியதொரு அமைதி உலகம் படைப்போம்

நாம் ஒவ்வொருவரும் ஒரே நாட்டு குடிமக்களான இலங்கை மக்கள் என்று ஒருபோதும் எண்ணிக்கொள்வதில்லை. இலங்கையின் ஒவ்வொரு சமூகத்தினரும் ஒரு தாயால் பிறப்பிக்கப்பட்ட எம்முடைய சகோதரர்கள் என்ற எண்ணம் எம் மனதில் தோன்றுவதே கிடையாது.

இந்தச் சகோதரத்துவப் பண்பு இன்மையே இன்றைய எத்தனையோ தாய்மார்களினதும், தந்தைமார்களினதும், பிள்ளைகளினதும் இழப்பிற்குக் காரணமாகும். இதன் விளைவு ஒருபோதும் சுதந்திரத்திற்கான விளைவாக அமையாது என்பது திண்ணம்.

எனினும் இந்த விடயம் அறிந்தும் இன அழிப்புக்காகவும் நாட்டின் பொருளாதார நிலை வீழ்ச்சிக்காகவும் அங்கவீனத்துவத்திற்காகவும் கல்வித்துறை வீழ்ச்சிக்காகவுமே யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. இதுவே குழி என்று தெரிந்தும் அதற்குள் கால் வைக்கும் செயலுக்கு ஒப்பான செயல்.

எப்போதுமே வெற்றியும் சரி தோல்வியும் சரி திரந்தரமல்ல. அதற்கெல்லாம் கொண்டாட்டங்கள் தேவையானவை அல்ல. எத்தனையோ உயிர்கள் ஷெல் வீழ்ந்து வெடித்து உலகைப் பிரியும் போது பட்டாசு வெடிக்கும் கொண்டாட்டம் தேவையா?

இதுதான் சமூகங்களுக்கிடையே துரோகத்தை ஏற்படுத்தக் காரணமாய் அமைகிறது. இவையெல்லாம் இந்த நாட்டிற்கு அவசியமற்ற ஒன்று.

நாம் பிறக்கும்போதும் ஏதும் கொண்டு வருவதில்லை. போகும்போதும் ஏதும் கொண்டு செல்வதும் இல்லை. நாம் செய்யும் நல்ல, தீய கருமங்களே நம் மோட்சத்தைத் தீர்மானிக்கும்.

கடந்த 2008ஆம் ஆண்டையும் சந்தோசமாக வாழ்த்தியே வரவேற்றோம். ஆனால் அது சண்டையிலும் சச்சரவிலும் இயற்கை அனர்த்தத்திலும் முடிவடைந்தது ஏன்?

புது ஆண்டு பிறக்கின்றது என்றாலும் அதில் வாழும் நாம் பழையவர்களே. எனவே பழையதே நடைபெறுகிறது. அப்படியானால் வெறும் இலக்க மாற்றங்கள் எந்தப் பயனையும் தராது. அதற்கான வாழ்த்தும் தேவையற்றது. வெறும் சம்பிரதாயங்களுக்காக வாழ்த்திவிட்டுப் பழைய சிந்தனையில் மூழ்கி இருந்தால் 2009ஆம் ஆண்டும் அதே கதிதான்.

எனவே 2009இல் நாம் எப்படி இருக்கப்போகிறோம் என்பதே கேள்வி. நாம் நம்மை மாற்றாமல் இலக்கத்தை மாற்றுவதால் எவ்வித பயனும் இல்லை என்பதைப் புரிந்தகொள்ளவேண்டும்.

இதற்காக நாம் என்ன செய்யவேண்டும். ஏனையோரது போதனை யாது? இவைபற்றிச் சிந்திப்பதன் மூலமே புத்தாண்டைப் புதுமை மிக்க ஆண்டாக அமைதிமிக்க ஆண்டாக மாற்றலாம். அதற்கு நாம் தயாராயின் முதலில் தர்மத்தைக் காக்க வேண்டும். தர்மத்தின் குறைவே நாட்டில் நிலவும் அழிவுகளுக்கெல்லாம் காரணம். உண்மை ஒழிந்து உதட்டில் பொய்யே பொதிந்துள்ளது.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமையில்லாத சொல்" பிறருக்குத் தீங்கு விளைவிக்காத வாழ்வும் பேச்சும், என்று மனித சமூகத்திடம் ஏற்படுகின்றதோ அன்றுதான் தர்மம் தழைக்கும்; நீதி ஓங்கும், அமைதி பிறக்கும்.

மேற்கூறியவாறு எல்லோரும் மாற்றமுறுவோமாயில் புத்தாண்டு வாழ்த்துக்கள். அனைத்தும் அரங்கேறும் புதியதொரு அமைதி உலகத்தையும் படைப்போம். அன்பு மிளிரும், அஹிம்சை ஓங்கும். எங்கே அதற்கு நாம் தயாரா?

(முற்றும்)

எஸ்.மாலதி, தரம் - 11,
யா/உடுவில் மகளிர் கல்லூரி.

## நட்பு

தூய்மையான இதயம் என்னும் இடத்தில்
போடும் அழகான கோலமே நட்பு
அதை அழியாமல் பாதுகாப்பது
நண்பர்களின் புரிந்துணர்வு

கடலில் இடமுண்டு நீரிற்காக
பூவில் இடமுண்டு வாசத்திற்காக
என்னில் இடமுண்டு நட்பிற்காக.

செ.விதுஷா,
10பி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## கேள்விக்கு என்ன பதில்? -19

45 என்ற இலக்கத்தை எவ்வாறாயினும் 4 பகுதிகளாகப் பிரித்துக் கொள்க. அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதிகளின் முதல் பகுதியுடன் 2ஐக் கூட்டுக. 2ஆம் பகுதியில் இருந்து 2ஐக் கழிக்க. மூன்றாம் பகுதியை 2ஆல் பெருக்க, நான்காம் பகுதியை 2ஆல் வகுக்க வரும் விடை ஒரே அளவாகும். அவ்வாறாயின் நான்கு பகுதிகளும் எவை?

(சரியான விடையை 02.04.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)

## தெரிந்து கொள்வோம் - உலக உலா

ஜெ.நிரோஜன்,
யாழ்.வீதி, யழ்ப்பாணம்.

1. உலகிலே முதலாவது துவிச்சக்கரவண்டி 1839இல் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது.
2. உலகில் முதன் முதலாக தொலைக்காட்சி நிகழ்ச்சி 27.01.1926இல் இங்கிலாந்தில் ஒளிபரப்பப்பட்டது.
3. உலகின் முதற் புகையிரதம் ட்றைவித்திக் என்ற ஆங்கிலேயரால் 1801இல் அமைக்கப்பட்டது.
4. உலகிலேயே முதலாவதாக பெற்றோலில் இயங்கும் மோட்டார் வண்டி 1885இல் பென்ஸ் என்ற ஜெர்மெனியரால் உருவாக்கப்பட்டது.
5. உலகிலேயே முதன் முதலாக, இஸ்லாமிய பெண் நாட்டின் ஆட்சித் தலைவராக பெனாசிர்பூட்டோ பாகிஸ்தானில் 1988இல் பிரதமர் ஆனார்.
6. உலகிலேயே முதன் முதலாக பெண் நீதிபதியாக 1876இல் பணியாற்றியவர் எஸ்தர் மேரிஸ் என்ற அமெரிக்கப் பெண்மணியாவார்.
7. உலகின் முதலாவது விண்வெளி வீராங்கனை ரஷ்ய நாட்டவரான வலன்டினா டெரஸ்கோவா (1963இல்) ஆவார்.
8. உலகின் முதலாவது பெண்ஜனாதிபதியாக 1974இல் மரியா ஸ்டெலா பெரோன் ஆர்ஜென்டினா நாட்டில் பதவி வகித்தார்.

## கேள்விக்கு என்ன பதில்? -17இன் சரியான விடை

உலோகங்கள் வளையக்கூடியவை. வளைப்பதனால் அதற்கு எந்தச் சேதங்களும் ஏற்படப்போவதில்லை அந்தவகையில் தங்கமும் ஒரு உலோகமாகும். 4:2 என்றவாறு தங்கக்கோலை வளைத்துச் சூட்கேஸ் உள்ளே சுலபமாக வைத்துச் செல்லலாம்.

### கேள்விக்கு என்ன பதில்? - 17- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - ம.ஜனார்த்தனன், மே/பா கே.நல்லதம்பி, துணவி பாடசாலை வீதி, வட்டுக்கோட்டை.
இரண்டாம் பரிசு - சர்வானந்தராசா டிலானி, 16/10, அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
மூன்றாம் பரிசு - த.மயூரி, கல்லடி ஒழுங்கை, தும்பளை வீதி, பருத்தித்துறை

## இளவல்கள் வட்டம்

### பாராட்டுப் பெறுவோர்:

1. ந.அபிலோசி சாந்தரூபன், 11சி, சென்.ஜோன்ஸ் கல்லூரி.
3. சர்வானந்தராசா கஜரூபன், 16/10, அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
4. மா.சிவலிங்கம், கைதடி தெற்கு, கைதடி.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
..........................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து இவ்வாண்டு ஓய்வூதியம் பெற 22பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து இந்த ஆண்டு ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 22 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று சமூகப் பாதுகாப்புச் சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் பி.பிரதீபன் தெரிவித்தார்.

சமூகப் பாதுகாப்புச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் விவரங்கள் வருமாறு:

ரி.மகேந்திரன் (நெடியகாடு, வல்வெட்டித்துறை), கே.கோபாலு (நெல்லண்டை கிழக்கு, தும்பளை), வி.சின்னத்தம்பி (தும்பளை, பருத்தித்துறை), ஏ.குணரத்தினம் (சிவப்பிரகாசம் லேன், வண்ணார்பண்ணை), திருமதி பி.நாகேஸ்வரி (ஓட்டுமடம், யாழ்ப்பாணம்), திருமதி ரி.லீலா (ஓட்டுமடம் லேன், நல்லூர்), கே.தவராஜசிங்கம் (சிவப்பிரகாசம் லேன், யாழ்ப்பாணம்).

திருமதி எஸ்.கமலாதேவி (உடையார் லேன், யாழ்ப்பாணம்), திருமதி என்.மகேஸ்வரி (மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்), ஏ.கனகரத்தினம் (தேவாலய வீதி, ஓட்டுமடம்), திருமதி என்.நாகரஞ்சினி (ஓட்டுமடம், யாழ்ப்பாணம்), ஏ.விஸ்வலிங்கம் (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்), திருமதி கே.தேவமணி (கம்பர் மலை, வல்வெட்டித்துறை) திருமதி எம்.புஸ்பராணி (கரவெட்டி கிழக்கு, கர வெட்டி), ஏ.பிறைசூடி (நெல்லியடி வடக்கு, கரவெட்டி).

திருமதி எஸ்.தவமணி (உடுப்பிட்டி வடக்கு, வல்வெட்டித்துறை), திருமதி ஆர்.மங்களாம்பிகை (கரவெட்டி மத்தி, கரவெட்டி), ஏ.பரராஜசிங்கம் (கரணவாய் வடக்கு, கரவெட்டி), கே.கண்ணகை (கரவெட்டி மத்தி, கரவெட்டி), திருமதி எஸ்.நல்லநாயகி அம்பாள் (இணுவில் மேற்கு, இணுவில்), எம். செல்வராசா (வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை), எஸ்.சுப்பிரமணியம் (பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம்). (9)

# மனை முகாமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.கல்வி வலய முறைசாராப் பிரிவினரின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் மனை முகாமைத்துவப் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் உட்படப் பலர் கலந்து கொள்வர். (203)

# கனடாவிலிருந்து சிக்காக்கோவுக்கு தமிழ் இளைஞர்கள் நடைபயணம்

கனடா வாழ் தமிழ் இளைஞர் குழுவொன்று கனடா ரொறன்ரோ நகரில் இருந்து அமெரிக்காவின் சிக்காக்கோ நகர் வரை நடை பயணம் ஒன்றைத் தொடங்கியுள்ளது என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரொறன்ரோவில் உள்ள அமெரிக்கத் தூத ரகத்தில் இருந்து நடை பயணத்தை தொடங்கினர் எனவும், சிக்காகோ நகரில் இருந்து ஒலிபரப்பாகும் ஒப்ரா வின்பிரி அரட்டை அரங்க நிகழ்வில் கலந்து கொண்டு ஈழத் தமிழர்களின் இக்கட்டான நிலமையை உலக நாடுகளுக்கு தெரியப்படுத்துவதே தமது நடை பயணத்தின் நோக்கம் எனவும் இக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

கனடாவுக்குள் தமது நடை பயணத்தை முடித்த நிலையில் நடை பயணக் குழுவினர் தற்போது அமெரிக்க எல்லையை அடைந்துள்ளனர். கலிபோர்னியாவை வசிப்பிடமாக கொண்ட ஒப்ரா வின்விரே அம்மையார் நடத்தும் அரட்டை அரங்கம் அமெரிக்காவில் பரவலான வரவேற்பை பெற்ற நிகழ்வாகும்.

அதனால் அமெரிக்க பொதுமக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள இவர், கடந்த அமெரிக்க தேர்தலில் முன்னாள் செனட்டர் பராக் ஒபாமாவின் வெற்றிக்கு வழிவகுத்து கொடுத்தார். அதற்கு நன்றிக் கடனாக அம்மையாருக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அமரிக்க செனட்டில் ஒரு ஆசனத்தை கொடுக்க முன்வந்தார்.

ஆபிரிக்க அமெரிக்கரான ஒப்ரா அம்மையார், அரட்டை அரங்கம் மூலம் அரசியல் தீர்வுகளையும், கொள்கைகளையும் மாற்றியமைக்க வழியமைத்தவர். இந்த அரட்டை அரங்கில் கலந்து தமிழரின் நிலமை பற்றி உலகிற்கு எடுத்துரைப்பதும் மற்றும் அமெரிக்காவின் இலங்கைக்கான கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுமே இந்த இளைஞர்களின் பிரதான நோக்கமாகும் எனக் கூறப்படுகிறது. (சி)

# கடத்தல்காரர் என நினைத்து பொலிஸார் ஊறுபொக்கப் பகுதியில் இருவர் மீது சூடு!

## எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 19

மாத்தறை, ஊறுபொக்கப் பகுதியில் கடத்தல்காரர்கள் எனச் சந்தேகித்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் உள்ள ஆயுர்வேத டாக்டர் ஒருவரிடம் கடத்தல்காரர்கள் இருவர் 5 லட்சம் ரூபா பணம் கப்பமாகக் கேட்டனர் எனவும், இது தொடர்பில் தமக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்தே பொலிஸார் நேற்று முன்தினம் காலை சந்தேக நபர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

காயமடைந்த இருவரும் மாத்தறை வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் அறியமுடிகிறது.

இதேவேளை, மரணச்சடங்கு நிகழ்வை ஒட்டிய துண்டுப்பிரசுரங்களை ஒட்டிக் கொண்டிருந்தவர்கள் மீதே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என அவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் மாலை ஊறுபொக்கப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் ஊறுபொக்கப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (சி)

# வாகரையில் காணாமற் போனோரை கண்டுபிடிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 19

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் மர்மமான முறையில் காணாமல் போயுள்ள இரண்டு இளம் குடும்பஸ்தர்களை கண்டுபிடித்து உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு வாழைச்சேனை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று முன்தினம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பால்சேனையைச் சேர்ந்த நோபட் சுதாகரன் (வயது-25) என்பவர் கடந்த மாதம் 7ஆம் திகதி வீட்டிலிருந்து விளையாடுவதற்காக வெளியே சென்ற பின்பு வீடுதிரும்பவில்லை என அவரது மனைவி எஸ்.மணியம்மா என்பவராலும், மாங்கேனியைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி தர்மகுமார் (வயது 34 ) கடந்த மாதம் 12ஆம் திகதி நீதிமன்ற அலுவல்கள் காரணமாக சென்று வருவதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றவர் பின்பு இது வரை வீடு திரும்பவில்லை என்று அவரது மனைவியான ஜே.விஜயா என்பவராலும் வாகரை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொலிஸாரால் நேற்று முன்தினம் நீதிமன்றதில் இது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதே இந்த உத்தரவை பிறப்பித்த நீதிபதி இது பற்றிய மேலதிக அறிக்கையை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார். (சி)

# சமய சந்நிதிகளில்

சங்கானை,மார்ச் 19

சங்கானை, லிங்கபுர ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.50 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மகேஸ்வர பூசையும் மாலை 5 மணிக்கு மணவாளக் கோல விழாவும் இடம்பெறும். (203-29)

* * *

யாழ்பாணம், மார்ச் 19

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை யாக பூசை, அர்ச்சனைகளும் மாலை நவகுண்ட பூசை, ஹோமம், தீபாராதனை என்பனவும் இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 5.30 தொடக்கம் திரவிய அபிஷேகம் நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் மாலை 6 மணிக்கு சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (203)

# பக்தனின் கேள்வி

ஒரு பக்தன் இறைவனைக் கேட்டான் "நீ எனக்குள், என்னைச்சுற்றி, எனக்கு மேலே, எனக்குக் கீழே இருப்பதாகக் கூறுகிறாய். ஆனால் என்னை ஏன் காப்பாற்றவில்லை?".

இறைவன் கூறினார் "உனக்குள்ளும் உன்னைச் சுற்றியும் நான் எப்போதும் இருக்கிறேன். என்னை வெளிப்புறத்தில் தேடாதே".

பக்தன் கேட்டான். "உண்மையாகவே எனக்குப் பின்னால் இருக்கிறாயா? 'ஆம், என்னுடைய நிழல்தான் உனது உடல்". கடவுள் தனக்குப் பின்னால் இருக்கிறாரா என்றறிய பக்தன் பின்னால் திரும்பியபோது, அவன் இறைவனைக்காண இயலவில்லை. "நீங்கள் பொய் சொல்கிறீரா. நான் உங்களைக் காணவில்லையே?" என்று கேட்டான். இறைவன் கூறினார் "நீ திரும்பிய போது, நானும் திரும்ப நேரிட்டது" நீ என்னை அதனால் காணவில்லை. நீ உண்மையை அறிந்து கொள்ளவில்லை". நீ நாற்காலிக்கு எதிரில் நின்றால், நாற்காலி உனக்கு முன் இருக்கிறது. நீ உன்னைத் திருப்பிக் கொண்டால், நாற்காலி உனக்குப் பின்னால் இருக்கிறது. உனது உணர்ச்சிகளுக்கு தகுந்தபடி கடவுள் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார்".

"நீங்கள் என் பிரார்த்தனையைக் கேட்கவில்லையா" என்று பிரார்த்திக்கும் போது அவர் காதுகளுடன் இருந்து கேட்பதாக உருவகப்படுத்திக் கொள்கிறாய். "நீங்கள் என் துன்பத்தைக் காணவில்லையா" என்று பிரார்த்திக்கும் போது நீ அரவது கண்களை மட்டுமே காண்கிறாய். "என்னுடன் நீங்கள் ஏன் தங்கலாகாது"? என்று நீ வேண்டும் போது, அவரது காலடியோசையைக் கேட்கிறாய். அவரது காலடியோசையைக் கேட்க விரும்பினால் நீ முழுமையான மௌனத்துடன் இருக்கவேண்டும்.

முற்கால முனிவர்கள், இறைவனின் குரலான ஓங்காரத்தைக் கேட்பதில் காலத்தைச் செலவிட்டார்கள். இப்போது கூட நீங்கள் அதைக்கேட்டு அனுபவிக்கலாம். உள்ளிருந்து "ஓம்" என்ற ஒலியைக் கேட்கலாம்.

இறைவன் கூறுகிறார். "பக்தா, ஸ்தூலக்கண்களைக் கொண்டு நீ பார்க்கிறாய். ஸ்தூலக்காதுகளைக் கொண்டு நீ கேட்கிறாய். முழு மௌனத்துடன் இரு. இறைவனது காலடியோசையைக் கேட்கலாம். உயர்ந்த பக்தனால் இத்தகைய புனித வழிகள் காண்பிக்கப்பட்டன. இதனை அறியாதவன் அறியாமையில் உழல்கிறான்.



சாயி சிந்தனை

# தவக்காலச் சிந்தனை



## மனிதரிடம் உதவி கேட்கும் இறைவன்

இறைமகன் இயேசு எல்லாம் வல்லவராகவும், அனைத்தையும் அறிந்தவராகவும் இருப்பதினால் நாம் பல விதமான உதவிகளை நாடி அவரது சன்னிதானத்திற்குச் செல்லுகின்ற வேளையில் அவர் எம்மிடமும் உதவி கேட்பவராக நிற்கின்றார் என்பதை வேதாகமத்தின் மூலமாக அறிகின்றோம். தமது ஒரே பேறான மகனை உலகிற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறைவன் அனுப்புவதற்காக நசரேத்துக்கன்னியாகிய மரியாளின் சம்மதத்திற்காகக் காத்திருக்கின்றார். "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று மரியாள் சொன்னபோது "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவா 1:14)

ஒருமுறை இறைமகன் இயேசு ஏரிக்கரையில் திரளான மக்கள் நின்று கொண்டிருந்த போது அவர்களுக்கு இறைவார்த்தையை அறிவிக்க பேதுருவின் படகைக் கேட்க அவரும் மகிழ்வோடு கொடுத்தபோது அதில் அமர்ந்தவாறு மக்களுக்குக் கற்பித்தார். (லூக் 3:1-3)

வேறொரு முறை இறைமகன் இயேசு கழுதைக்குட்டி மீது அமர்ந்து வெற்றி ஆர்ப்பரிப்புடன் ஜெருசலேம் செல்வதற்காக தம் சீடர்களை கழுதைக் குட்டி உரிமையாளரிடம் அனுப்பி "இது ஆண்டவருக்கு தேவை" என்று கூறி வாங்கி வரும்படி கட்டளையிட்ட போது அவர்களும் சென்று கேட்க, உரிமையாளர் மகிழ்வுடன் கழுதைக்குட்டியை கொடுக்கின்றார். (லூக் 19:30-35)

பிரிதொரு முறை இறைமகன் இயேசு தம் சீடர்களுடன் பாஸ்கா விருந்துண்ண ஒரு வீட்டின் உரிமையாளரிடம் மேல் மாடியை தரும்படி தம் சீடர்களான பேதுருவையும், யோவானையும் அனுப்பி கேட்டபொழுது வீட்டு உரிமையாளரும் மகிழ்வுடன் சம்மதிக்கின்றார். (லூக் 22:8-13)

மேற்சொன்ன அனைத்திலும் இருந்து நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் மீட்பின் வரலாற்றில் இறைமகன் இயேசு மனிதரின் இசைவையும், ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றார் என்பதேயாகும். நம்மிடம் அவர் பாவ மாசு படிந்த உங்கள் உள்ளத்தை தூய்மையாக்கி என்னிடம் ஒப்படையுங்கள். அப்பொழுது நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தை உங்களுள்ளும் இருக்கும் என்று கூறுகின்றார். நாங்கள் அவர் கேட்டதைப் போன்று தூய்மையான உள்ளத்தைக் கொடுக்க தயாராக இருக்கிறோமா? அல்லது அவரை மீண்டும் சிலுவையில் அறையத் தயாராக இருக்கிறோமா?

கூ.அருள்நேசன்.
குருநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

**வினாத்தாள் - II** நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

எல்லா் வினாக்களுக்கும் விடை தருக.

* கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து அதன் கீழ் அமைந்துள்ள வினாக்களுக்கு, மிகப் பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.

01. பறக்கும் குருவியோடென் - உள்ளம்
பறந்து பறந்து திரியும்
கறக்கும் பசுவைச் சுற்றி - அதன்
கன்று போலத் துள்ளும்
ஈயும் எனக்குத் தோழன் - ஊரும்
எறும்பும் எனக்கு நேசன்
நாயும் எனக்குத் தோழன் - குள்ள
நரியும் எனக்கு நண்பன்

கல்லின் கதைகள் எல்லாம் - இருள
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சும் அறிவேன் - அதைப்
புராணமாக விரிப்பேன்
அலகில் சோதியான - ஈசன்
அருளினாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும் - கவிக்கு
உரிய பொருளாம், ஐயா!

1) ''பறக்கும் குருவியோடென் உள்ளம் பறந்து பறந்து திரியும்'' எனும் வாக்கியத்தின் எழுவாய்,
   1) பறக்கும். 2) குருவி. 3) உள்ளம்.
2) ''கறக்கும் பசு'' எனும் தொடரின் கருத்து,
   1) கதறுகின்ற பசு. 2) பாலைத்தரும் பசு. 3) புல் மேயும் பசு.
3) ''ஊரும் எறும்பும்'' என்பதில், ஊரும் என்பது,
   1) பெயர்ச்சொல். 2) வினையெச்சம். 3) பெயரெச்சம்.
4) ''நண்பன்'' என்பதன் எதிர்ப்பொருட்சொல்,
   1) நேசன். 2) பகைவன். 3) மித்திரன்.
5) ''காது குளிரக்கேட்டல்'' என்றால்,
   1) மன விருப்பத்துடன் கேட்டல்.
   2) வேண்டாவெறுப்புடன் கேட்டல்.
   3) கோபத்தை உண்டு பண்ணுபவற்றைக் கேட்டல்.
6) பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களை இக்கவிதைப்பகுதியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
   1) நண்பன் - ..........
   2) மனம் - ..........
   3) கொடை - ..........
   4) செய்யுள் - ..........

02. பின்வருவன உயர்திணையா? அஃறிணையா? என எழுதுக.
   1) இறைவன் - ..........
   2) மேசை - ..........
   3) நான் பாடினேன் - ..........
   4) பசு புல் மேய்ந்தது - ..........
   5) புறா - ..........
   6) பஸ்லியா - ..........
   7) மலக்குகள் - ..........
   8) கந்தசாமி - ..........

03. கீழ்வரும் சொற்களை ''ம'' வரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக.
முகம், மொழி, மானம், மைதானம், மோர், மௌனம், மின்னல், மஸ்றூபா, மூடை, மீசை, மேகம், மெட்டி

..........

..........


04. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
   1) கணனி: ..........
   2) மெல்லமெல்ல: ..........
   3) வானம்: ..........
   4) படபட: ..........
   5) மேளம் போல: ..........

05. பின்வரும் உலக நீதிப்பாடல் வரிகளின் கருத்துக்களை எழுதுக.
   1) ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
   ..........
   2) மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
   ..........
   3) கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
   ..........


06. சரி/ பிழை கூறுக.
   1) பறவைகளுக்கு பற்கள் இல்லை. ( )
   2) குயில்கள் குளிர்காலத்தில் கூவுவது இல்லை. ( )
   3) எலிகள் இல்லாத நாடே இல்லை. ( )
   4) பல்லி நீர் அருந்துவதே இல்லை. ( )
   5) கெட்டுப்போன முட்டை நீரில் மிதக்கும். ( )

07. வெற்றுக்கூட்டில் வரவேண்டிய உருவை தரப்பட்டுள்ள விடைகளில் தெரிவு செய்து கோடிடுக.

1)





2)





08. உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் உருவின் எண்ணை எழுதுக.

1)




2)




09. பின்வரும் உருக்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

1)  ..........

2)  ..........

3)  ..........


4)  ..........

10. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.
   1) தெலும் - ..........
   2) அம்ப - ..........
   3) எலுவா - ..........
   4) எலதெனா - ..........

11. பின்வரும் சொற்களின் சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.
   1) பலாப்பழம் - ..........
   2) சாம்பிராணி - ..........
   3) வடக்கு - ..........
   4) ஏணி - ..........

12. எண்கோலத்தை அவதானித்து விடையளிக்குக.

1)




2)


| | |
|---|---|
| 9 | 3 |
| 12 | 6 |

| | |
|---|---|
| 8 | 12 |
| 6 | 10 |

| | |
|---|---|
| 12 | 13 |
| 11 | ...... |


13. 1) பின்வருவனவற்றைக் கொண்டு உருவாக்கக்கூடிய திண்ம உருவின் பெயரை எழுதுக.

அ.



..........

ஆ.



..........

2) தான் பாடசாலை நோக்கிச் சென்றபோது தனது இடது கைப்பக்கம் சூரியன் உதிப்பதை பாத்திமா கண்டாள் எனின், அவள் செல்லும் திசை யாது? ..........

**அன்பு மாணவர்களே!**
இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. 1) எந்த இரு நகரங்களிடையே அதிக தூர இடைவெளி காணப்படுகின்றது?
.........................................

| | | | யாழ் |
|---|---|---|---|
| திருமலை | | | 46km |
| மட்டக்களப்பு | | 23km | 96km |
| அம்பாறை | 18km | 41km | ........ |

2) அம்பாறையிலிருந்து - யாழ்ப்பாணம் வரையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்?
.........................................

3) திருமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான தூரவித்தியாசம் எவ்வளவு?
.........................................

15. கீழே தரப்பட்டுள்ள சொற்களைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
பட்டு, காபனீரொட்சைட், D.S.சேனாநாயக்க, மான், கறையான், மழைநீர், எலி, ரந்தெனிகல.
1) ஈசல் எதிலிருந்து தோன்றுகின்றது? - ..............................
2) வெருட்சியான பார்வையுள்ள மிருகம் எது? - ..............................
3) தாவரங்கள் இரவில் வெளியிடும் வாயு எது?..............................
4) தூய நீராகக் கருதப்படும் நீர் எது? -..............................
5) இலங்கையின் தேசபிதா யார்? - ..............................
6) இலங்கையின்மிகப்பெரிய நீர்த்தேக்கம் எது?..............................
7) நீரின்றி அதிககாலம் வாழக்கூடிய பிராணி எது?- ..............................
8) நூலைப்பெறப் பயன்படும் பூச்சி எது? - ..............................

16. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) தொண்ணூற்றொன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஒன்பது என்பதை இலக்கத்தில் எழுதுக.
.........................................
2) பெட்டி ஒன்றில் 3 புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. 423 புத்தகங்களை அடுக்க அவ்வாறான எத்தனை பெட்டிகள் தேவை?
.........................................
3) வெற்றிடத்தில் வரும் இலக்கம் யாது? 14 x ............ = 84
4) ஒரு விமானம் ஒரு தடவையில் 112 பயணிகளுடன் கொழும்பிலிருந்து சென்னைக்குப் பறந்து செல்லும். நாள் ஒன்றுக்கு 7 தடவைகள் பயணிகளைக் கொண்டுசென்றதெனின், சென்னைக்குச்சென்ற பயணிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
.........................................

17. "தொடர்ச்சியான அடைமழைக்குப் பின்னர் வானம் வெளித்தபோது........." என்ற தலைப்பில் பொருத்தமான கருத்துள்ள வசனப்பிழைகளற்ற திருத்தமான ஆறு வாக்கியங்கள் எழுதுக.
1).........................................
2).........................................
3).........................................
4).........................................
5).........................................
6).........................................

**ஆக்கம்:-திரு.யு.எல்.எம்.சாஜித்,**
**கல்முனை/அல் மஷ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை, நிந்தவூர்.**

**கடந்த 10.03.2009 இல் வெளிவந்த வினாத்தாள் 1இற்கான விடைக்குறிப்புக்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - 3 | 02 - 3 | 03 - 3 | 04 - 1 | 05 - 3 |
| 06 - 3 | 07 - 2 | 08 - 2 | 09 - 3 | 10 - 2 |
| 11 - 2 | 12 - 2 | 13 - 3,5 | 14 - 3,5 | 15 - 3 |
| 16 - நிகழ்காலம். | 17 - 2 | 18 - 8 | 19 - 1 | 20 - 4 |
| 21 - 2 | 22 - 3 | 23 - 2 | 24 - 3 | 25 - 1 |
| 26 - 1 | 27 - 2 | 28 - 2 | 29 - 3 | 30 - 2 |
| 31 - 2 | 32 - 1 | 33 - 2 | 34 - 3 | 35 - 2 |
| 36 - 2 | 37 - கானாங்கோழி. | | 38 - பொலன்னறுவை. | 39 - 2 |
| 40 - 3 | | | | |

**எதிர்வரும் வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட பிரபல ஆசிரியர்களான திரு.பி.பத்மநேசன்,திரு.எஸ்.தயாளலிங்கம் ஆகியோர் தொகுத்து வழங்கும் வினாத்தாள் - 01 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.**

## அன்பு மாணவர்களே!

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035



யா/குடத்தனை அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளர் த.தபேந்திரராஜா உரையாற்றுகின்றார். அருகில் பாடசாலை அதிபர் மா.நவநீதம்மணியும் காணப்படுகின்றார்.



இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற பேடன் பவல் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட ஆணையாளர் வி.ரவீந்திரன் கல்லூரி அதிபர் அ.சதானந்தன், கல்லூரியின் சாரண ஆசிரியர் செ.சிவகுமாரன் ஆகியோரால் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நீண்டகாலம் அதிபராகப் பணியாற்றி இளைப்பாறிய அதிபர் ஆ.ஜெகநாதனுக்குப் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் பழைய மாணவர் சங்கத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் உரையாற்றுவதையும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் கி.குகநாதன், இளைப்பாறிய அதிபர் ஆ.ஜெகநாதன், திருமதி ஜெகநாதன், பாடசாலை உப அதிபர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். [illegible]



உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் சி.நடராஜா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் உடுவில் பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகழிகளுக்குள் பாதுகாப்புத் தேடும் நிலையில் மக்கள்; உடல் ரீதியான அபாய நிலையை எதிர்கொள்கிறார்கள்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மாதாந்த அறிக்கையில் தெரிவிப்பு

மோதல் நடைபெறும் பிரதேசத்தில் மனிதாபிமான நெருக்கடி நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

அனேகமான மக்கள் அகழிகளில் பாதுகாப்புத் தேடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அவர்கள் குறிப்பிடத்தக்க உடல் ரீதியான அபாய நிலையை எதிர்கொண்டுள்ளார்கள். வாரமாதக் கணக்கில் திரளாக பல இடங்களுக்கு நகர தள்ளப்பட்ட இந்த மக்கள் தங்களின் முழு உணவுக்கும் மோதல் பகுதிக்கு வெளியே உள்ள பிரதேசத்திலிருந்து பெறுவதில்தான் தங்கியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி போல் கஸ்ரெல்லா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:

யுத்தம் தொடரும் இந்த வேளையில் மோதல் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் உயிருக்கு ஏற்படக்கூடிய அச்சம் அதிகரிக்கிறது. காயமடைந்த மற்றும் நோயாளிகளை வெளியேற்றவும் உணவு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மருந்துத் தொகுதியை எடுத்துச் செல்ல வழித்துணை வழங்குவதன் மூலம் எமது அமைப்பு சிறிதளவு நம்பிக்கையை ஏற்படுத்த வழிவகுக்கிறது.

துரிதமாகக் குறைவடையும் நிலப்பரப்பில் முடக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான மக்கள் மோதலில் இருந்து விடுபடவும் பாதுகாப்பு, உணவு மற்றும் மருந்து உதவிகளையும் நாடி கரையோரப் பகுதிக்கு நகருகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கரையோரப் பகுதிகளில் மக்களின் எண்ணிக்கை கடந்த வாரங்களில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தும், சுத்தமான நீருக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. மேலும் சனநெருக்கம், நீர் மற்றும் சுகாதாரக் குறைபாடு காரணமாக இப்பகுதி மக்கள் தொற்று நோய் ஆபத்தை எதிர்கொள்கிறார்கள். இப்பிரதேசம் நாளாந்தம் ஷெல் வீச்சுக்கு உள்ளாகின்றது.

புதுமாத்தளன் பகுதிக்கு வரும் காயமடைந்த மற்றும் நோயாளிகளுக்கு உள்ளூர் மக்கள் பல்வேறு உதவிகளை வழங்குகின்றனர்.

சுகாதார அமைச்சின் பணியாளர்கள் வைத்திய உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் மருந்துப் பொருள்களுக்குப் பற்றாக்குறையே நிலவுகிறது.

அரசினதும் புலிகளதும் இணக்கப்பாட்டுடன் ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் நோயாளரை புதுமாத்தளனில் இருந்து திருகோணமலைக்கு அனுப்பிவைக்கிறது.

இதுவரை 'கிறீன் ஓசன்' கப்பல் மூலம் நோயாளர்கள், காயமடைந்தோர், உதவியாளர்கள் உட்பட 4 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

புதுமாத்தளனுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு 12 தடவைகள் உணவுக் கப்பல்களுக்கு ஐ.சி.ஆர்.சி வழித்துணை வழங்கியது.

மூன்று தடவைகள் மருந்துப் பொருள்கள் வழங்க முடிந்திருந்தது. ஆனால் அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

புதுமாத்தளன் கரையில் இருந்து மீன்பிடி வள்ளங்கள் மூலம் கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குவது ஆபத்து நிறைந்த ஒன்று. இதற்கு 275 பேர் தேவைப்படுகின்றனர். - என்றுள்ளது.

# வன்னியில் சிக்குண்டுள்ளவர்களில் நூற்றுக்கணக்கில் சிறுவர்கள் கொலை

## யுனிசெவ் அறிக்கையில் தெரிவிப்பு

வாஷிங்ரன், மார்ச் 19

இலங்கையில் இடம்பெற்றுவரும் இரு தரப்பு மோதல்கள் காரணமாக நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டும் ஏராளமானோர் காயமுற்றும் உள்ளனர் என்று ஐ.நா.சிறுவர்கள் நல ஸ்தாபனமான 'யுனிசெவ்' தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அந்நிறுவனம் விடுத்த அறிக்கையில் மிக மோசமான உணவு, தண்ணீர், மற்றும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆன் வெனமன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மோதல் நடக்கும் பகுதிகளில் சிக்குண்டுள்ள சிறுவர்களும் அவர்களின் குடும்பங்களும் நோய்களாலும் போஷாக்கின்மையாலும் மரணமாகக் கூடிய அபாயத்திலுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான முகவர் அமைப்புக்கள் பாதுகாப்பாகவும் ஒழுங்காகவும் அப்பகுதிகளுக்கு சென்று வர வேண்டிய மிக அவசரமான தேவை ஏற்பட்டுள்ளது. அதன்மூலம் உயிர் காக்கும் பொருள்களை வழங்கி உதவமுடியும், அத்தியாவசிய மனிதாபிமான ஆதரவு கிடைக்கும் பகுதிகளுக்குப் பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். மோதலில் சிக்குண்டுள்ள சிறுவர்களின் உரிமைகள் முழுதாக மதிக்கப்பட வேண்டும், சிறுவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வெனமன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை செஞ்சிலுவைச் சர்வதேச குழு கொழும்பில் விடுத்துள்ள அறிக்கையொன்றில், போராளிகள் வசமுள்ள பகுதிகளில் இன்னமும் வாழ்ந்துவருகின்ற மக்கள் தொடர்பான மனிதாபிமான செயற்பாடுகள் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தினசரி தாக்குதல்களை எதிர்கொண்டு வருகிறார்கள். நோய்கள் பரவும் அபாயமும் உருவாகி வருகின்றது என்று தெரிவித்துள்ளது. ஒவ்வொரு நாளும் ஷெல் வீச்சுக்கு இலக்காகும் இப்பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடும், சீரான சுகாதார வசதியின்மை போன்றவை மக்களை பெரும் ஆபத்தில் மூழ்கடித்துள்ளன என்று தெரிவித்துள்ளது அந்நிறுவனம். (ப)


# வேலை ஆள்கள் தேவை

யாழ்.நகரில் பிரபல புடைவைக் டைக்கு அனுபவமுள்ள ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. (மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

விள.இல: 3183

மே/பா.உதயன். (சி/557563)


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

நாவற்குழி சித்திர வேலாயுதர் தேவஸ்தான வம்சாவழி தர்மகர்த்தாவாகிய

**அமரர் சின்னத்தம்பர் தில்லைநாதன்**



அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கவலையை அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் தெரியப்படுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சித்திர வேலாயுதரை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.

சித்திர வேலாயுதர் தேவஸ்தானம்,
நாவற்குழி. (83623) பரிபாலனசபை.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பண்டாரி வேலாயுதம்**

அன்னை மடியில் 31*03*1923
அம்மன் அடியில் 12*04*2004

திதி:19.03.2009


தந்தையே அன்புத் தெய்வமே
அழுத கண்ணீர் காயவில்லை
அகவை ஐந்து ஆனதுவோ?
ஆவி துறந்து ஆண்டு பல சென்றிடினும்
அன்பு முகம் நினைவிருக்கும்
ஆசை முகம் அனுதினமும் எம்முன்னே
- தோன்றுதப்பா
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்
- நித்தமும்
சொர்க்கத்தில் நீங்கள் வாழ்க!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேரத்கேணியடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (83540)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 10 * 01 * 1910



உதிர்வு 20 * 02 * 2009

**அமரர் கந்தப்பர் சபாபதி**

திதி: அபர பக்க ஏகாதசி

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரம் ஒழுங்கை பருத்தித்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டு கடந்த 20.02.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.03.2009) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் தெணியம்மன் மடத்திலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

வல்லிபுரம் ஒழுங்கை,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. பிள்ளைகள். (83612)

# எட்டாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் துரைராஜா தவமலர்**



மலராக : 24.12.1945
சருகாக: 19.03.2001

சொந்தம் சொல்ல ஆயிரம் இருந்தும்
பந்தம் என்பது அன்னைக்கு நிகராகுமா?
நித்தம் அழியா நினைவுடன் நாமிங்கு
நெஞ்சில் இருத்தி இறைஞ்சுகின்றோம் ஆசிதனை!

'தவமஹால்', அல்வாய். (83622) குடும்பத்தினர்.


# STUDY IN INDIA

GARDEN CITY COLLEGE

BANGALORE UNIVERSITY DEGREES

*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK*

**Courses Offered**

BCA Bachelor of Computer Application
B.Sc. Computer Science/Microbiology/Genetics Biotechnology/Fashion and Apparel Design
B.A. Journalism/B.Com Computers
BBM Bachelor of Business Management
BHM Bachelor Of Hotel Management
BPT Bachelor of Physiotherapy
LAW Bachelor of Law

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

www.studyingcc.com

தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.

# விசேட சலுகை

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகள் மற்றும் அடையாள அட்டைப் படங்களையும் குறைந்த கட்டணத்தில் படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

4R= 10/=

...றல் கலர் லாப்

# வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ். மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

வேலை பற்றி

★ 3 மாத பயிற்சி காலத்தை உடையது.
★ இக்காலப்பகுதியில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
★ பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாக்கும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
★ பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

அடிப்படைத் தகைமை

* G.C.E O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6பாட சித்தி.
* 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையை (BIO DATA) 30.03.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல. 3182
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலர் உணவுப் பொருள்கள் விநியோகம்

நவாலி, மார்ச் 19

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க கிளைகளில் உலக உணவுத்திட்ட நிவாரணம் பெறுபவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (203-100)

## வர்த்தக வங்கி நடத்தும் புலமைப்பரிசில் மாணவர் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை வர்த்தக வங்கியில் கணக்கு வைத்துள்ளவர்களும் தமது பாடசாலைகளில் முதல் மூன்று இடத்தைப் பிடித்தவர்களுமான தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களுக்கு மேற்படி வங்கி வழமை போல் பாராட்டிப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

அந்த வகையில் இன்று (19-3-2009) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள வாடிக்கையாளர் சேவைப் பிரிவு மண்டபத்தில் 2008 புலமைப் பரிசில் மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற விருக்கின்றது.

## பல்பொருள் விற்பனை நிலையம் உடுப்பிட்டியில் அமைப்பு

கெருடாவில், மார்ச் 19

கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் உடுப்பிட்டியில் பால் கொள்வனவு விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் ஊடாக பால், தயிர், நெய், யூஸ், யோக்கட் போன்ற பால் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. (203-253)

## பாடசாலை மட்டத்தில் ஊடகக் கல்வி

சுன்னாகம், மார்ச் 19

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையம் பாடசாலை மட்டத்தில் ஊடகக் கல்வி தொடர்பான அறிமுகத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 'பத்தாம் தரத்தில் ஊடகக்கல்வி நெறிப்படுத்தல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஊடக பாடத்தைக் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் இக்கருத்தரங்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (203-38)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (203)




## மக்கள் குடியிருப்புக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் மணல் அகழ்வு

கரவெட்டி, மார்ச் 19

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வல்லிபுர வெளி என்னும் இடத்தில் சட்ட விரோதமாக மணல் அகழப்பட்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட நாகர்கோயில் பகுதி மக்களைப் குடியமர்த்துவதற்கு இந்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இடத்தில் அண்மைக் காலமாக பெரும் எண்ணிக்கையான வாகனங்களில் மணல் அகழ்ந்து கொண்டு செல்லப் படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலகம், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாகச் சம்மந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-70)




சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 'நிஷா' அனர்த்தத்தால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு 'கியூமெடிக்கா' நிறுவனத்தால் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியில் உள்ள 'கியூமெடிக்கா' நிறுவன அலுவலகத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பயனாளிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதையும்- வண பிதா சாம் இராஜசூரியர் அருகில் நிற் பதையும் படத்தில் காணலாம். (9)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

சிவலிங்க யோகேந்திர நிலையத்தின் ஏற்பாட்டில் புதிய யோகாசன வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இந்த வகுப்புகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கல்வியங்காட்டில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையத்தில் சி.உமா சுதன் தலைமையில் நடைபெறும். (204)

## நல்லைக் குருமணியின் குருபூசை தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை அடுத்தமாதம் இரண்டாம் திகதி இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீனத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று புராணபடனம், பஜனை என்பன இடம்பெறும். (203)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களம் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணியை இந்த வாரத்தில் இருந்து ஆரம்பித்துள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட இடங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இந்த தடுப்பூசி போடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (203-224)

# முதுமையும், இளமையும் இணைந்து கொண்ட சமூகநிலை வாழ்வியலை பெரியபுராணம் காட்டுகிறது

## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

முதுமையும், இளமையும் இணைத்துக் கொண்டு சமூக நிலையில் வணிகர்களின் வாழ்வியல் எவ்வாறு இருந்தது என்பதைப் பெரியபுராணம் காட்டுகின்றது. இல்லறம், துறவறம் ஆகிய இரண்டும் எவ்வாறு பேணப்பட்டன என்பதையும் இந்தநூல் தெளிவாக எடுத்து விளக்குகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தலைமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

அண்மையில் உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இந்நிலையில் எமது முன்னோர் பெண்மை பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களை அறியப் பெரிய புராணம் உதவுகின்றது.

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் 10 சொற்பொழிவுகள் பூரணை நாள்களில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் நிறைவு பெற்றதும் சொற் பொழிவுகள் நூலாகத் தொகுத்து வெளி யிடப்படும்- என்றார்.

இந்நிகழ்வில் காரைக்கால் அம்மையார் புராணத்தின் கட்டமைப்பு என்னும் தலைப்பில் உரையாற்றிய கோப்பாய் தெற்கு றோ.க.வித்தியாலய அதிபர் ச.லலீசன் தெரிவித்ததாவது:

இறைபுகழ் கூறும் பெரியபுராணம் புராணமாக இருந்தபோதும் காவியக் கட்டமைப்பைப் பேணி பாராட்டப்பட்டமையால் காவியம் என்றும் கூறப்படுகின்றது.

பெரிய புராணத்தில் இடம்பெறும் பெண் நாயன்மார்கள் இசைஞானியார், மங்கையர்க்கரசியார், காரைக்கால்அம்மையார் ஆகிய மூவருமே.

இவர்களில் காரைக்கால் அம்மையாரின் வரலாறு 66 பாடல்களிற் கூறப்பட்டுள்ளது. அம்மையார் இறைவனிடம் வேண்டும் இறவா இன்ப அன்புதான் சேக்கிழார் பெரியபுராணத்தின் மூலம் முன்வைத்துள்ள செய்தி ஆகும்- என்றார்.

''காரைக்கால் அம்மையார் புராணத்திற் பெண்மை என்னும் தலைப்பில் உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி பவனேசன் ஒவ்வொரு மாணவனும் கற்க வேண்டிய நூல் பெரியபுராணம் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

பெண்களின் துணை இல்லாவிட்டால் ஒருவர் நாயன்மாராக வரமுடியாது என்று கூறுமளவிற்குப் பெரியபுராணத்தில் பெண்களின் பெருமை கூறப்படுகின்றது- என்றார்.

கருத்துரைகளைத் தொடர்ந்து கருத்தாடல் நிகழ்வு இடம்பெற்றது. (203-55)


## மருத்துவப் பராமரிப்பு நிலையம் வட்டுக்கோட்டையில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் வைத்தியகலாநிதி திருமதி ரேணுகா கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சுகாதார சேவை அமைச்சின் வடமாகாண செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஞானசோதி, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், வட மாகாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.குகநேசன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டினேஸ் ஜெயக்குமார், வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி ஆகியோர் கலந்து கொள்வர்.



பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்னும் தலைப்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய கருத்தரங்கு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி பவனேசன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் மங்களவிளக்கேற்றுவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றுவதையும் கோப்பாய் தெற்கு றோ.க.வித்தியாலய அதிபர் ச.லலீசன் அமர்ந்திருப்பதையும் மூன்றாவது படத்தில் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை [illegible] காணலாம்.

(படங்கள்: மகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

அராலி மத்தி கணவத்தையைச் சேர்ந்த செல்லையா பரமலிங்கம் என்பவரது தே.அ.அ (681873511V) வி.அ.அ.என்பன அராலி பாலத்திற்கும், செட்டியார் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அராலி வடக்கு, செட்டியார் மடத்திலுள்ள மில்லில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1072 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் 03 12 28 43

17-03-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400551740 - 400571928

ஜக்பொட் பரிசு ரூபா. 13,115,525/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,108 | 20/- | 4,402,160/- |
| 2 இலக்கங்கள் | 20,138 | 40/- | 805,520/- |
| 1 இல. + லக்கினம் | 19,948 | 60/- | 1,196,880/- |
| 2 இல. + லக்கினம் | 1,887 | 200/- | 377,400/- |
| 3 இலக்கங்கள் | 544 | 1000/- | 544,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 13,115,525/- | 13,115,525/- |
| மொத்தம் | | | 21,311,485/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 262,680 | | 21,811,485/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

தொடர் இலக்கம் 500568643 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 400568054-5-37 |
| நுவரெலியா | 400557339-3-01 |
| குருநாகல் | 400557755-4-41 |
| கண்டி | 400561423-7-18 |
| அம்பாறை | 400559672-6-08 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 19

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை பிரதி வெள்ளிதோறும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் அத்தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(203-236)

## மரவேலைப் பயிற்சி நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 19

தொழிற்றுறைத் திணைக்களத்தால் 'நேரப்' திட்டத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட மரவேலைப் பயிற்சி நெறியின் நிறைவு விழா எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொழிற்றுறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் ப.ராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும் 'நேரப்' திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம், 'நேரப்' திட்டத்தின் மேலதிக பிரதித் திட்டப் பணிப்பாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலினி அன்ரன் யோகநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(50-9)

## விற்பனைக்கு

SLT தொலைபேசி இணைப்பும், சிட்டையிடும் இயந்திரம், ரெலிபோன் பூத் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 9110

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல பழைய மாணவர்களையும் மேற்படி கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)

## நன்றி நவில்கின்றோம்



திருமதி
**இராசேந்திரன் பரமேஸ்வரி**
(பூபதி)

கடந்த 12.03.2009 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், வெளிநாடு/உள்நாடுகளில் இருந்து தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்த எமது அன்பு உள்ளங்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் அவர் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு சகல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கு எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (83625)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



சாவகச்சேரி, விளைவேலி
அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான
பரம்பரை ஆதீனகர்த்தர்
அமரர், பிரம்மஸ்ரீ ப.மஹாகணபதிசர்மா அவர்களின்

## நினைவஞ்சலி நிகழ்வும் நூல் வெளியீடும்

இடம் : தேவஸ்தான கல்யாண மண்டபம்.
காலம் : 21.03.2009 சனிக்கிழமை மு.ப.10 மணியளவில்

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு அமரர் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

(83626) அமரர் ஸ்ரீ ப.மஹாகணபதிசர்மா குடும்பத்தினர்.


Annai Nagaa Food City

# யாழ்.நகரில் முதலாவது

## முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

# Annai Nagaa Food City

இன்று (19.03.2009) 7ஆவது ஆண்டில் கால் பதிப்பதை முன்னிட்டு சித்திரைப் புத்தாண்டு வரை



அசத்தலான OFFERS

- விலைக்கழிவுகள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- மகளிருக்கான றெடிமேட் ஆடைகள் 20% கழிவு
- கவரிங் நகைகள் 50% கழிவு
- Pirma Chicken 550/=
- அதிக பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் சீட்டிழுப்பில் பங்குபற்றிப் பல பெறுமதி மிக்க பரிசில்களை வெல்ல முடியும்.
- இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

ஏராளம்... ஏராளம்...

- சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- இறைச்சி / பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள்.
- சீஸ், பட்டர், மாஜரின், பால்மா வகைகள் (சீஸ்ஸ், சொசேஜஸ், -Sausages)
- பழவகைகள், பழரசங்கள், கேக் மற்றும் கேக் உள்ளீடுகள், ஐசிங் பூக்கள்.
- பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், பிஸ்கட், வெளிநாட்டு சொக்கலெட் வகைகள்.
- அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்கள்.
- சிகை அலங்காரப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்

மேலும் பல

7ஆம் ஆண்டில் வெற்றிகரமாகக் கால்பதிக்க ஒத்துழைப்பு நல்கிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

தினசரி காலை 8.00 - மாலை 6.00 வரை திறந்திருக்கும்.

175, K.K.S. Road, Jaffna. T.P - 021-5515, 021-7875


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 தீவிரவாத அமைப்புகளுக்கு பங்களாதேஷில் தடைவிதிப்பு

டாக்கா, மார்ச் 19

பங்களாதேஷில் 12 தீவிரவாத அமைப்புகளுக்கு அரசால் தடை விதிக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்புகளின் பெயர் பட்டியலும் அரசால் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் துணை இராணுவப் படையினர் (ரைபிள்ஸ் படைப்பிரிவினர்) அண்மையில் மேற்கொண்ட கிளர்ச்சிக்கு அனுசரணையாக செயற்பட்டவை என சந்தேகிக்கப்படும் ஜமாய்த்துல் முஜாஹிதீன், ஹர்கத்துல் ஜிகாத் அல்-இஸ்லாமி (ஹுஜி) ஆகிய அமைப்புகளும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பங்களாதேஷ் உள்துறை அமைச்சகத்தால் இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் இதில் இடம்பெறும் 12 தீவிரவாத அமைப்புகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பங்களாதேஷின் முக்கிய இடங்களில் பாதுகாப்பையும், கண்காணிப்பையும் தீவிரவாதப்படுத்துமாறும், தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்குமாறும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, பங்களாதேஷ் துணை இராணுவப் படையினர் கலகத்தில் ஈடுபட்டமை குறித்து நடைபெற்றுவரும் புலன் விசாரணையை ஒருங்கிணைக்கும் பொறுப்பு வர்த்தக அமைச்சரும், ஓய்வு பெற்ற இராணுவ கேணலுமான பரூக் கானிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணை இராணுவப் படையினர் மேற்கொண்ட திடீர் கிளர்ச்சியில், தற்போது தடைசெய்யப்பட்டுள்ள 12 தீவிரவாத அமைப்புகளில் சிலவற்றுக்குத் தொடர்பு இருக்கலாம் என பரூக் கான் தெரிவித்துள்ளார்.

இப்பட்டியலில் ஹிஸ்புல் தௌஹித், உலமா அஞ்சுமன் அல்- பைனாத், ஹிஸ்புத்-தஹ்ரிர், இஸ்லாமிய ஜனநாயகக் கட்சி, இஸ்லாமிய சமாஜ் தௌஹித் டிரஸ்ட், ஜக்ரதா முஸ்லிம் ஜனடா, பங்களாதேஷ்-ஷகாதத்-இ அல்- ஹிக்மா கட்சி, பங்களாதேஷ் தமிரா அர்-தின், பங்களாதேஷ் ஹிஸ்ப்-இ அபு ஒமர், அல்லாதல் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

ஹர்கத்துல் ஜிகாத் அல்- இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்கும், பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. ஹர்கத்துல் ஜிகாத் அல்-இஸ்லாமி அமைப்பை உலக அளவிலான பயங்கரவாத அமைப்பு என அமெரிக்க வெளியுறவுத்துறை ஏற்கெனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெ. 'டிஸ்கவரி' விண்கலம் சர்வதேச மையத்தில் இணைவு

கேப் கனவெரல், மார்ச் 19

அமெரிக்காவின் கேப் கனவெரலிலுள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து 7 விண்வெளி வீரர்களுடன் கடந்த 15 ஆம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்ட டிஸ்கவரி விண்கலம், சர்வதேச விண்வெளி மையத்துடன் செவ்வாய்க்கிழமை மதியம் வெற்றிகரமாக இணைந்தது.

விண்வெளி மையத்துடன் இணைவதற்கு முன்னர், டிஸ்கவரி விண்கலத்தின் அடிப்பகுதியில் பொருத்தப்பட்ட வெப்பத் தகடுகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என பரிசோதிக்கப்பட்டது. பரிசோதனையில் தகடுகள் நல்ல நிலையில் உள்ளமை தெரியவந்தது என நாஸா தெரிவித்தது.

## பாப்பரசர் ஆபிரிக்காவுக்கு விஜயம்

வத்திக்கான், மார்ச் 19

றோமன் கத்தோலிக்க 16 ஆவது ஆசீர்வாதப்பர் பாப்பரசர் பெனடிக்ட், ஆபிரிக்க கண்டத்திற்கான தமது முதல் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஆசீர்வாதப்பர் முதலில் கேமரூன் நாடு சென்றுள்ளார். அவர் ஆபிரிக்கக் கண்டத் தில் திறந்த வெளி பிரார்த்தனைகளை நடத்துவார்.

அத்துடன் ஆபிரிக்க கண்டத்திலுள்ள கத்தோலிக்கக் குருமார்களைச் சந்தித்து, ஒக்ரோபரில் ரோமில் நடக்கவுள்ள சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல் குறித்தும் பேசுவார்.

## மடகஸ்காரில் ஆட்சியை கைப்பற்றியது எதிரணி

மடகஸ்கார், மார்ச் 19

மடகஸ்காரில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள அன்றி ரஜோலினா, ''அரச அமைப்பில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் தேவை. 'அப்படியானால் தேர்தல்கள் நடத்த சுமூகமான நிலை ஏற்படும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.



ஜனாதிபதி மார்க் ரவலோமனானா அரசியல் நெருக்கடிகளை அடுத்து, பதவி துறந்ததும், ஆட்சியைக் கைப்பற்றியுள்ள எதிரணித் தலைவர் அன்றி ரஜோலினாவுக்கு இராணுவத் தலைவர்கள் ஆதரவு வழங்க ஆரம்பித்துள்ளார்கள்.

எனினும், தற்போதைய அரச அமைப்பின்படி, எதிரணித்தலைவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு வரையறுக்கப்பட்ட வயதை எட்டவில்லை. தற்போது இவருக்கு வயது 34. அதனால் தற்போதைய வரையறையை எட்டுவதற்கு இன்னும் 6 வருடங்கள் காத்திருக்கவேண்டும்.

ஜனாதிபதி மார்க் ரவலோமானானா திங்கட்கிழமை பதவி துறந்ததும் உடனடியாக எதிரணிக்கு ஆதரவான துருப்புகள் ஆட்சியைக் கைப்பற்றின. இத்துருப்புகளின் அனுசரணையோடு, மறுதினமான செவ்வாய்க்கிழமை அன்றி ரஜோலினா தாமாகவே ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.

அன்றி ரஜோலினா பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தாம் அளித்துள்ள பேட்டியில், ''இன்னும் இரு வருடங்களுக்குள் மடகஸ்காரில் சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல்கள் நடத்தப்படும். அதேவேளை, தற்போதைய அரசமைப்பில் மாற்றங்கள் தேவை'' என குறிப்பிட்டுள்ளார்.

''இந்த நாட்டின் இயக்கம் முடங்கிவிடாது. இந்நாட்டின் இடைக்கால அரசின் ஜனாதிபதியாக மக்கள் என்னை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எனது பெயரை மட்டுமே பிரஸ்தாபித்துள்ளார்கள். அடுத்த 18 அல்லது 24 மாதங்களுக்குள் தேர்தல்கள் இடம்பெற நான் வழி செய்வேன்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''ஏன் ஏற்கனவே தேர்தல்கள் நடத்தப்படவில்லை'' என அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, ''அதே வரலாறு மீளத் தொடர இடமளிக்கப்படமாட்டாது'' என பதிலிறுத்துள்ளார்.

''அரசமைப்பை நாங்கள் மாற்றியமைக்கவேண்டும். அதேவேளை, அரசியல் கட்சிகளுக்கான சட்ட முறைமைகள், நிபந்தனைகள் ஆகியவற்றையும் நாங்கள் மீள் பரிசீலனை செய்யவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஏலம் விடப்பட்ட காந்தியின் பொருள்களை இந்தியாவுக்கு கொண்டு வருவதில் சிக்கல்

நியூயோர்க், மார்ச் 19

மகாத்மாகாந்தி பயன்படுத்திய பொருள்களை ஏலம்விட்ட அமெரிக்கர், தனக்கு அந்த பொருள்களில் 5 பொருள்கள் மீண்டும் வேண்டும் என கோரியுள்ளார்.

அவர் காந்தியின் பொருள்களை மீட்கத் தனி சட்டநிபுணரையும் நியமித்துள்ளார். இதனால் காந்தியின் பொருள்களை இந்தியாவுக்கு கொண்டுவருவதில் சிக்கல் எழுந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் ஓடிஸ். இவர்,மகாத்மா காந்தி பயன்படுத்திய கடிகாரம், மூக்குகண்ணாடி, தட்டு, கிண்ணம் ஆகியவை உட்பட சில பொருள்களை அண்மையில் ஏலம் விட்டார்.

இந்திய தொழிலதிபர் விஜய் மல்லையா ரூ. 9 கோடிக்கு ஏலம் எடுத்தார். இதையடுத்து, அந்த பொருள்கள் அனைத்தையும் இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏலம் விட்டவரே அவற்றில் 5 பொருள்கள் மீண்டும் தனக்கு வேண்டும் என்பதில் பிடிவாதமாக உள்ளார். காந்தியின் பொருள்களை மீட்க அவர் முதலில் ரவி பத்ரா என்ற சட்டநிபுணரை நியமித்தார். எனினும், அவர் திடீரென பதவி விலகினார். இதையடுத்து, தோமஸ் கிஸ்ஸன் என்ற சட்டநிபுணரை அவர் புதிதாக நியமித்துள்ளார்.

தோமஸ் கிஸ்ஸன் காந்தியின் பொருள்களை மீட்க தீவிரமாகியுள்ளார். ஏலம்விட்ட நிறுவனத்துடன் அவர் பேச்சுகள் நடத்தி வருகிறார்.

காந்தியின் பொருள்கள் ஏலம்விடப்படுவதற்கு முன்னரே நவஜீவன் அறக்கட்டளையினர் ஏல விற்பனையை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

காந்தியின் பொருள்கள் அனைத்தும் நவஜீவன் அறக்கட்டளைக்கே சொந்தம். அதனால், அந்த பொருள்ளகள் மீது எவரும் உரிமை கொண்டாட முடியாது. எனவே, ஏலத் துக்கு தடைவிதிக்க வேண்டும் என அறக்கட்டளையினர் தமது மனுவில் கோரியிருந்தனர். இதையடுத்து, ஏலத்துக்கு டில்லி உயர் நீதிமன்றம் தடைவிதித்தது. எனினும், காந்தியின் பொருள்கள் ஏலம் விடப்பட்டன.

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாலும் காந்தி பொருள்களை விஜய் மல்லையாவிடம் ஒப்படைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

## பாக். மக்கள் கட்சியும் முஸ்லிம் லீக்கும் கூட்டணி சேரும் சாத்தியம் - கிலானி

இஸ்லாமாபாத், மார்ச் 19

பாகிஸ்தான் மக்கள் கட்சியும், நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் மீண்டும் கூட்டணி அமைப்பதற்கான சாத்தியம் உண்டு என பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்திலுள்ள பள்ளியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் தாம் பங்குபற்றிய பின்னர் அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார். அவர் தமதுரையில், ''பஞ்சாப் மாகாணத்தில் ஆளுநர் ஆட்சியை அமுல்படுத்தும் விடயத்தில் எனக்கு உடன்பாடு கிடையாது. விரைவில் அங்கு ஆளுநர் ஆட்சி திரும்பப் பெறப்படும்'' என்றார்.

ஆட்சியில் இருக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சியுடன் நவாஸ் ஷெரீப்பின் கட்சி மீண்டும் கூட்டணி அமைக்குமா? என அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கவர் பதிலிறுக்கையில், ''இன்றைய சூழலில் அரசியல் தினந்தோறும் மாற்றம் கண்டு வருகிறது. எனவே, இரு கட்சிகளும் கூட்டணி அமைக்கும் வாய்ப்பு இருப்பதை மறுப்பதற்கில்லை'' என்றார்.

## தென்னாபிரிக்காவில் தேர்தல்: பிரசுரங்களில் காந்தியின் படம்

டர்பன், மார்ச் 19

தென்னாபிரிக்காவில் ஏப்ரல் 22 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதையொட்டி, தேர்தல் பிரசாரங்கள் தற்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள் ளன. ஆளுங் கட்சி அரசியல்வாதிகள், பிர சார சுவரொட்டிகளில் மகாத்மா காந்தியின் உருவப் படத்துக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள்.

மகாத்மா காந்தி இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு முன்னர், தென்னாபிரிக்காவில் சட்டத்தரணியாகப் பணியாற்றி வந்தவர். அக்கால கட்டத்தில் தென்னாபிரிக்க இந்தியர்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்டு வந்துள்ளார். அத்துடன் அம்மக்களின் அவல நிலையை நீக்கவும் முயன்று வந்துள்ளார்.

தற்போது தென்னாபிரிக்க ஆளுங் கட்சியின் அரசியல்வாதிகள், தமது தேர்தல் பிரசாரத்தில் மகாத்மா காந்தியின் உருவப்படங்களையும் பயன்படுத்தி வருகிறார்கள். ஆளுங் கட்சியான ஆபிரிக்கன் தேசிய காங்கிரஸ் கட்சி, இந்திய மக் களைக் கவர்வதற்காக மகாத்மா காந்தியின் உருவப்படம் பதித்த சுவரொட்டிகளை அச்சிட்டு, பொது இடங்களில் ஒட்டி, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

## படைகளின் ஆயுத பலத்தை உயர்த்த ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி திட்டம்

மாஸ்கோ, மார்ச் 19

ரஷ்ய இராணுவத்தினதும் கடற்படையினதும் ஆயுத பலம் அதிகரிக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெடவேடேவ் அறிவித்துள்ளார்.

''உலகில் அரசியல் பதற்றமும், இராணுவப் பதற்றமும தலையெடுத்துள்ளன. இந்நிலையில், ரஷ்யப் படைப் பலத்தை நவீனமயப்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் இந்த நவீனமயப்படுத்தல் திட்டம் ஆரம்பமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ அமைப்பில் புதிய நாடுகள் இணைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளமை பற்றியும் பிராந்திய நெருக்கடிகள் பற்றியும் ரஷ்ய அரசு அக்கறை கொண்டுள்ளது. அதேவேளை, ரஷ்யாவின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அணு ஆயுத நிலையங்களை நவீனமயப்படுத்தலுக்கு முன்னுரிமை வழங்கப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் அமெரிக்கா தனது ஏவுகணை எதிர்ப்பு வலயத்தை நிறுத்தி வைக்கத் திட்டமிட்டுள்ளது. ரஷ்யாவுடனான பனிப்போர் முடிந்த பின்னரும் நேட்டோ அமைப்பு விஸ்தரிக்கப்படுகிறது. இவற்றால் ரஷ்யா சீற்றமடைந்துள்ளது என பி.பி.ஸியின் மாஸ்கோ நிருபர் தெரிவிக்கிறார்.

## அமைதிப்படைமீது சூடானில் சூடு; ஒருவர் பலி!

டாபூர், மார்ச், 19

சூடானிய டாபூர் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள ஐ.நா. ஆபிரிக்க ஒன்றிய கூட்டு அமைதிப் படையைச் சேர்ந்த வீரரொருவர், துப்பாக்கிக் கும்பலின் தாக்குதலுக்குப் பலியானார் என கூட்டுப்படைப் பேச்சாளர் கெமால் சைகி, ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

தென் டாபூரின் தலைநகரான நியாலாவில், எட்டுத் துப்பாக்கிதாரிகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த அமைதிப் படையினரை நோக்கி பதுங்கியிருந்தவாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என்றும் அவர் விளக்கினார்.

படுகாயமடைந்த அமைதிப்படை வீரரொருவர், வட டாபூரின் தலைநகரான பாஷீரிலுள்ள அமைதிப்படை மருத்துவ முகாமுக்கு, விமானமூலம் கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காமல், அங்கு மரணமானார் என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினையில் தமிழகம் எரிமலையாக வெடிக்கப் போகிறது

## அதன் அறிகுறி தீக்குளிப்பு என்கிறார் நெடுமாறன்



புதுவை, மார்ச் 19

ஈழத்தமிழர்பிரச்சினை, தமிழக மக்கள் மத்தியில் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. 11 இளைஞர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். மத்திய, மாநில அரசுகள்இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். தமிழக மக்கள் எரிமலையாக வெடிக்கப் போகிறார்கள் என்பதற்கான அறிகுறியே இதுவாகும் - என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொண்ட கடலூர் அன்னவெளியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொண்டர் ஆனந்தின் பூதவுடலுக்கு மலரஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

ஈழத் தமிழருக்காக இதுவரை தமிழகத்தில் 11 பேரும், வெளிநாட்டில் 3 பேரும் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். உயிர்த் தியாகம் செய்த அனைவரும் இளைஞர்கள். வாழவேண்டிய வயதில் இலங்கைத் தமிழர் படும் வேதனைகளைக் கண்டு தாங்க முடியாமல் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். இதை நாங்கள் ஆதரிக்கவில்லை. யாரும் உயிர்த்தியாகம் செய்ய வேண்டாம் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் அனைவரும் ஒற்றுமையாக கேட்டுக் கொண்டுள்ளோம்.

இலங்கைப் பிரச்சினை, தமிழக மக்கள் மத்தியில் கொந்தளிப்பை உருவாக்கி உள்ளது. இதை அரசு உணர வேண்டும். சராசரியாக 4 நாள்களுக்கு ஒருவர் வீதம் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். மத்திய, மாநில அரசுகள் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். தமிழக மக்கள் எரிமலையாக வெடிக்கப் போகிறார்கள் என்பதற்கான அறிகுறியே இதுவாகும்.

தியாகத்துக்கு மதிப்பளித்து இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு போர் நிறுத்தம் செய்ய மத்திய, மாநில அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்க வேண்டும் - என்றார்.

# தமிழினத்தை அழிக்க நினைப்போர் வாழ்ந்ததாகச் சரித்திரம் கிடையாது

## ஜி.கே.மணி தெரிவிப்பு



தமிழ் இனத்தை அழிக்க நினைப்பவர்கள் வாழ்ந்ததாகச் சரித்திரம் கிடையாது. இலங்கையில் போர் நிறுத்தம் வரவில்லை என்றால் தமிழ் இளைஞர்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள் - என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் இலங்கையில் போர் நிறுத்தம் வலியுறுத்தி புதுவை சிங்காரவேலர் சிலை அருகில் நேற்றுமுன்தினம் இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழ் இனத்தை அழிக்க நினைப்பவர்கள் வாழ்ந்ததாக சரித்திரம் கிடையாது. வட இந்தியர்களுக்கு பாதிப்பு என்றால், மத்திய அரசு சும்மா இருக்குமா? இலங்கையில் போர் நிறுத்தம் வரவில்லை என்றால் தமிழ் இளைஞர்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். இந்தப் பிரச்சினை தொடர்பாக யாரும் தீக்குளிக்க வேண்டாம். உங்களது உணர்வுகளைப் போராட்டம் மூலம் வெளிப்படுத்துங்கள் - என்றார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளருமான வைகோ பேசியவை வருமாறு -

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யுமாறு மத்திய அரசு ஏன் கூறவில்லை? தமிழக சட்டசபைத் தீர்மானம் என்ன ஆனது? தேசிய பாதுகாப்புச் சட்டத்தை காட்டி எங்களை யாரும் மிரட்ட முடியாது - என்றார்.

கூட்டத்தில் தீக்குளித்து இறந்த கடலூரைச் சேர்ந்த இளைஞர் தமிழ்வேந்தன் குடும்பத்திற்கு ரூபா 3 லட்சம் நிதி அளிக்கப்பட்டது. இதனை பழ.நெடுமாறன் முன்னிலையில் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ வழங்கினார்.

கூட்டத்தில் புதுவை எம்.எல்.ஏக்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் துணைச் செயலாளர் மகேந்திரன், புதிய பார்வை ஆசிரியர் நடராஜன், பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் விஸ்வேஸ்வரன், பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் தங்க. கலைமாறன், தேசியவாதக் காங்கிரஸ் சுந்தரமூர்த்தி, ராஷ்டிரிய ஜனதாதள தலைவர் சஞ்சீவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தீக்குளித்து இறந்த ஆனந்தின் பூதவுடலுக்கு பழ.நெடுமாறன் அஞ்சலி செலுத்தும்போது......

# ஈழப் படுகொலைக்குத் துணைபோன கருணாநிதிக்கு மன்னிப்புக் கிடையாது

## ஜெயலலிதா ஆவேசக் குமுறல்

சென்னை, மார்ச் 19

**அற்ப பதவிக்காக இலங்கைத் தமிழினப் படுகொலைக்கு துணைபோன முதல்வர் கருணாநிதியை தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

நான் ஏதோ வசைமாரி பொழிந்து அறிக்கைகள் விட்டேன் என கருணாநிதி ஒரு பட்டியலிட்டுள்ளார். அந்தப் பட்டியலிலுள்ள வார்த்தைகளைப் பார்க்கும்போது அவை வசைமாரி பொழியும் அறிக்கைகள் அல்ல. உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கும் அறிக்கைகள் என்பது விளங்கும்.

10.10.2008 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில் தமிழர்கள் மீது கருணாநிதிக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்கும் மத்திய அரசுக்கு, தி.மு.க. அளித்து வரும் ஆதரவை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும். அப்படிச் செய்தால்தான் மத்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட முன்வரும் எனத் தெரிவித்திருந்தேன்.

என்னுடைய கோரிக்கைகள் ஏற்கப்பட்டிருக்குமானால், இந்த நேரத்தில் இலங்கையில் நிச்சயமாக போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கும். தமிழினப் படுகொலை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். அற்ப பதவி சுகத்திற்காக, தமிழினப் படுகொலைக்கு துணைபோன கருணாநிதியை தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்பதை கருணாநிதிக்கு இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

4.10.2008 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில், கருணாநிதி பேச்சு, மூச்சற்றுப் பேரவார், வாய் மூடிக் கிடப்பார் எனக் குறிப்பிட்டேன் என கருணாநிதி கூறியுள்ளார்.



தமிழர்களின் நலன், பாதுகாப்பு, நல்வாழ்வு என்பன பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் கருணாநிதி பேச்சு, மூச்சற்றுப் போவார். வாய்மூடிக் கிடப்பார் என்றுதான் நான் குறிப்பிட்டிருந்தேன்.

அண்டை மாநிலங்களுடனான நதிநீர் பிரச்சினை, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, கச்சதீவுப் பிரச்சினை என்றால் வாய்மூடிக் கிடப்பார் என்பதுதான் இதற்குப் பொருள். இதுதான் உண்மை நிலை. அதில் தவறு ஒன்றும் இல்லை.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையிலும், தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும் ஜனநாயக ரீதியில், உண்மை நிலையை அறிக்கைகள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது எனது கடமை. நான் ஆற்றும் ஜனநாயகக் கடமைகளையெல்லாம் வசைமாரி பொழியும் அறிக்கைகள் என கருணாநிதி குறிப்பிடுவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது - என்றுள்ளது.

# ஈழத்தமிழர் அவலம் தாங்காது தீக்குளித்த இருவரும் மரணம்

ஈழத் தமிழர் இனப் படுகொலையைக் கண்டித்தும் அங்கு உடனடியாகப் போரை நிறுத்தக் கோரியும் கடந்த ஞாயிறன்று தீக்குளித்த 2 இளைஞர்களும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர்.

அவர்களின் உடலங்களுக்கு தமிழ் உணர்வாளர்கள் மலர்வணக்கம் செலுத்தினர். இருவரின் சடலங்களும் அவர்களின் ஊரில் எரியூட்டப்படுகின்றன.

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தை அடுத்த தத்தனூர் கீழ்வெளியைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டரான இராஜசேகர் (வயது - 30) ஈழத்தில் இனப் படுகொலையைக் கண்டித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது உடலில் மண் எண்ணையை ஊற்றித் தீக்குளித்தார்.

இவர் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் காலை அவர் உயிரிழந்தார்.

அவரின் உடலுக்கு பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் தலைவர்களும், தமிழ் உணர்வாளர்களும் மலர்வளையம் வைத்து வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து, இராஜசேகரின் சடலம் அவரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் வணக்கத்துக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், கடலூரையடுத்த அன்னவெளியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தொண்டர் ஆனந்தும் கடந்த ஞாயிறன்று தனது வீட்டு வாசலில், உடலில் மண் எண்ணையை ஊற்றித் தீயிட்டுக் கொண்டார்.

உடனடியாக கடலூர் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ஆனந்த் மேலதிக சிகிச்சைக்காக புதுச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்தார்.

அவரின் உடலத்துக்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் மற்றும் பலர் மலர் வளையம் வைத்து வணக்கம் செலுத்தினர்.

இதன் பின்னர், ஆனந்தின் உடலம் கடலூர் அன்னவெளியில் உள்ள அவரின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு பொதுமக்கள் வணக்கம் செலுத்தி வருகின்றனர்.

# பெரியார் வழியில் வந்தவர்கள் 'முக்கண்ணை' நம்புவதில்லை!

## ஜெயலலிதாவுக்கு கருணாநிதி பதில்



சென்னை,மார்ச்19

பெரியார், அண்ணா வழிவந்த பகுத்தறிவாளர்கள் முக்கண்ணை நம்புவது இல்லை - என்று ஜெயலலிதாவுக்கு முதல்வர் கருணாநிதி பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

ஜெயலலிதா வழங்கிய பேட்டியில் மூன்றாவது அணி பற்றி என்னிடம் செய்தியாளர் கேட்டதற்கு, அதை மூன்றாவது கண் என்று நான் கூறியதற்குப் பதில் கூறியிருக்கிறார். மூன்றாவது கண் என்பது பொதுவாக மனிதர்களுக்கு இல்லாத ஒன்றாகும். என்றாலும்கூட, மூன்றாவது அணி பற்றி நான் சொன்னதும், சிவபெருமான் நெற்றியிலே உள்ள மூன்றாவது கண் பற்றி ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தால் தவறு செய்பவர்கள் சாம்பலாக்கப்படுவார்கள் என்கிறார் ஜெயலலிதா.

உண்மையிலேயே பெரியார், அண்ணா வழி வந்த பகுத்தறிவுவாதிகள், "முக்கண்ணை" நம்புவதில்லை. ஆனால் ஜெயலலிதா, முக்கண்ணை நம்பி தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறார்! பாவம் பகுத்தறிவு!

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து உண்மை நிலவரங்களை எடுத்துக் கூறி - மத்திய, மாநில அரசுகளின் சார்பில் என்னென்ன சாதனைகள் என்பதையெல்லாம் எடுத்து விளக்கிட வேண்டும். குறிப்பாக சேது சமுத்திரத் திட்டத்தை வரவிடாமல் செய்தவர்கள் யார், அவர்கள் மட்டும் தடுத்திராவிட்டால் 100 ஆண்டுகளுக்கு மேலாக நாம் கனவு கண்டதும், அண்ணாவும், காமராஜரும் வலியுறுத்தியதுமான அத்திட்டம் நிறைவேறியிருக்குமே, அதற்கு இடைஞ்சல் செய்தவர்கள் யார் என்பதையெல்லாம் மக்களுக்கு விளக்கிட வேண்டும் - என்றுள்ளது.

# பா.ஜ.கவுடன் கூட்டணி வைப்பதுதான் விஜயகாந்துக்கும் நாட்டுக்கும் நல்லது

## தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் கருத்து



சென்னை, மார்ச் 19

பாரதீய ஜனதாக் கட்சியுடன் விஜயகாந்த் கூட்டணி வைத்தால் அது அவருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது - என்று தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். பேட்டியின் விவரம் வருமாறு-

கே - பா.ஜ.க. சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முடிவு செய்யப்பட்டு விட்டதா?

ப - பா.ஜ.க. போட்டியிடும் தொகுதிகளையும், வேட்பாளர்களையும் அடையாளம் கண்டு முடிவு செய்து விட்டோம். தமிழக அரசியலில் ஒரு தெளிவான சூழ்நிலை ஏற்படாததால் இன்னும் அறிவிக்காமல் இருக்கிறோம்.

கே - தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துடன் கூட்டணி வைக்க ஏற்பாடு நடக்கிறதா?

ப - விஜயகாந்தை பொறுத்தவரையில் தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் மாற்றாக ஒரு சக்தி என்பது போன்ற தோற்றத்தை தமிழ்நாட்டில் உருவாக்கி இருக்கிறார். இந்த நிலையில் அவர் தி.மு.கவுடனோ, அ.தி.மு.கவுடனோ கூட்டணி வைத்துக்கொண்டால் அவர் தனித்தன்மையை இழந்து விடுவார்.

தேர்தலைப் புறக்கணித்தால் அவருடைய தனித்தன்மை, வாக்குவங்கி எல்லாவற்றையும் இழந்து விடுவார். பா.ஜ.கவுடன் கூட்டணி என்றால் மட்டுமே அவருடைய தனித்தன்மை, வாக்கு வங்கி இரண்டையுமே காப்பாற்ற முடியும்.

எனவே, இப்போதுள்ள சூழ்நிலையில் விஜயகாந்த், பா.ஜ.கவுடன் சேர்ந்தால் மட்டுமே அவருக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. எதுவாக இருந்தாலும் முடிவு எடுப்பது அவர் கையில்தான் இருக்கிறது - என்றார்.


# நடிகர் ஜெயம் ரவிக்கு ஜூன் 4இல் திருமணம்

சென்னை,மார்ச்19

நடிகர் ஜெயம்ரவிக்கும், பட அதிபர் சுஜாதா விஜயகுமாரின் மகள் ஆர்த்திக்கும் சென்னையில் வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி திருமணம் நடக்கிறது.

'ஜெயம்', 'மழை', 'உனக்கும் எனக்கும்', 'தீபாவளி', 'சந்தோஷ் சுப்பிரமணியம்', 'தாம் தூம்' ஆகிய படங்களில் நடித்தவர் ஜெயம்ரவி. இவர், பிரபல பட அதிபர் மோகனின் மகன் ஆவார்.

ஜெயம்ரவியும், பட அதிபர் விஜயகுமார் - சுஜாதா விஜயகுமார் தம்பதியின் மகள் ஆர்த்திக்கும் இடையே காதல் மலர்ந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினர். இந்தத் திருமணத்துக்குப் பெற்றோர்களும் சம்மதம் தெரிவித்தனர்.



இதைத் தொடர்ந்து, ஜெயம் ரவிக்கும், ஆர்த்திக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதன்படி, இவர்களது திருமணம் வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி சென்னையில் நடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்றோரி, ரைடர் நிதான ஆட்டம் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து 279


ஹாமில்டன், மார்ச் 19

ஹாமில்டனில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்ட நியூஸிலாந்து 60 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக் களை இழந்து இக்கட்டான நிலையிலிருந்தது, எனினும் டானியல் விற்றோரி (118) மற்றும் ஜெஸ்ஸி ரைடர் (102) ஆகியோரது அபார சதத்தினால் மீண்டது. நியூஸிலாந்து அணி 279 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் டோனி முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்தார்.

ஆட்டக்களத்தில் ஈரப்பதன் இருந்ததால் பந்துகள் சற்று கூடுதலாக எழும்பியமையாலும், இந்தியப் பந்துவீச்சாளர்களான சகீர், முனாப், இஷாந்த் ஆகியோரின் சீரான அளவு மற்றும் துல்லியமான பந்து வீச்சினாலும் நியூஸிலாந்து விக்கெட்டுகளை மளமளவென இழந்தது.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய குப்டில் 14 ஓட்டங்கள் எடுத்து ராகுல் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன் மூலம் டிராவிட் உலகிலேயே டெஸ்ட் போட்டிகளில் அதிக பந்துகளைப் பிடியெடுத்த சாதனையை வைத்திருந்த மார்க் வாஹை சமன் செய்துள்ளார்.



சதம் கடந்த மகிழ்ச்சியில் நியூஸிலாந்து அணித் தலைவர் விற்றோரி, ஜெஸ்ஸி ரைடர்...

அடுத்து வந்த டேவிட் பிளின் ஓட்டம் எதுவும் எடுக்காமல் சகீர் கான் பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இரண்டாவது ஆரம்ப வீரரான மேகின் டோஷ் 12 ஓட்டங்களை எடுத்த இஷாந்த் பந்தில் ஷேவாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ரெய்லர் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இஷாந்த் ஷர்மாவின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்ததாக பிராங்ளின் ஓட்டம் எடுக்காமலும் மக்கலம் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். உணவு இடைவேளையின்போது நியூஸிலாந்து 61 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

அதன் பின்னர் வெயில் அடித்ததால் ஆடுகளம் காய்ந்து துடுப்பாட்டத்திற்கு சுலபமானது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட விற்றோரியும் ரைடரும் தங்களது பாணி ஆட்டத்தைக் கடைப்பிடித்தனர்.

47 ஓவர்களில் இருவரும் இணைந்து 186 ஓட்டங்களை சேர்த்தனர். விற்றோரி 164 பந்துகளில் 14 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் சகிதம் 118 ஓட்டங்கள் எடுத்து கடைசியாக முனாப் பட்டேல் வீசிய பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கைல் மில்ஸ் பட்டேலின் அடுத்த பந்திலேயே வெளியேறினார்.

ஜெஸ்ஸி ரைடர் நிதானமாக அடி அபாரமான சதத்தை எட்டினார். 102 ஓட்டங்களை எடுத்து இஷாந்த் ஷர்மாவின் பந்து வீச்சில் அவர் ஆட்டமிழந்தார்.

நியூஸிலாந்து தன் முதல் இன்னிங்ஸில் 279 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டமிழந்தது. இந்திய அணியின் பந்துவீச்சாளர்களில் இஷாந்த் ஷர்மா 4 விக்கெட்டுகளையும் முனாப் பட்டேல் 3 விக்கெட்டுக்களையும் சகீர் கான் 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன்சிங் ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

# சத்திரசிகிச்சையை முடித்து வீடு திரும்பினார் மென்டிஸ்

கொழும்பு, மார்ச், 19

லாகூர் தாக்குதலில் காயமடைந்த இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் அஜந்த மென்டிஸ் வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளார். இலங்கை அணி வீரர்கள் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சமயம் லாகூர் தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

இந்தத் தாக்குதலையடுத்து சுற்றுப் பயணம் பாதியில் ரத்துச்செய்யப்பட்டது. அஜந்த மென்டிஸ், சமரவீர மற்றும் தரங்க ஆகியோர் மோசமாகக் காயமடைந்தனர். இத்தாக்குதலில் மென்டிஸின் தலைக்குள் இரும்புக் கம்பி ஒன்று ஊடுருவி இருந்தது. இது சில நாள்களுக்கு முன்னர் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. இந்த மூன்று வீரர்களும் கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்தனர்.

இந்த நிலையில் தற்போது மென்டிஸ் முழுக் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளார். சமரவீர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். தரங்க கடந்த வாரம் வீடு திரும்பியிருந்தார்.

# ஐ.பி.எல். தொடருக்கான புதிய அட்டவணை தயார்

ஐ.பி.எல்., தொடருக்கான திருத்தியமைக்கப்பட்ட புதிய அட்டவணை மத்திய உள்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இதற்கு பெரும்பாலான மாநிலங்கள் சம்மதம் தெரிவித்துள்ளதால் போட்டிகள் திட்டமிட்டபடி நடக்க வாய்ப்புள்ளது. தேர்தல் காரணமாக பாதுகாப்பு அளிக்க மறுத்த டில்லி, ஜெய்ப்பூர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் போட்டிகள் நடத்தப்படமாட்டா.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) சார்பில் எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி முதல் மே 24ஆம் திகதி வரை இரண்டாவது ருவென்ரி 20 போட்டிகள் நடக்கவுள்ளன. இதே காலகட்டத்தில் அமைச்சரவைத் தேர்தலும் நடப்பதால் பாதுகாப்பு அளிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து அட்டவணையை இரண்டு முறை மாற்றியும் சிக்கல் தொடர்ந்தது. பின்னர் மாநில அரசுகளுடன் கலந்துபேசி உரிய மாற்றங்களைச் செய்யும்படி ஐ.பி.எல்., நிர்வாகிகளை மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டது. இதையடுத்து நேற்றுமுன்தினம் மூன்றாவது முறையாக திருத்தியமைக்கப்பட்ட அட்டவணை மத்திய உள்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பாதுகாப்புக் குறித்து அச்சம் தெரிவித்த டில்லி, ஜெய்ப்பூர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்கள் நீக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான போட்டிகள் மும்பை (ஏப்ரல் 10, 12, 14, 15, 17, 23, 25, மே 3, 5, 8, 12, 18) கொல்கத்தா (ஏப் ரல், 11, 15, 16, 18, 22, 24, 26), பெங்களூர் (மே 4, 7, 10, 11, 14, 19, 20), மொகாலி (ஏப்ரல், 12, 19, 21, 28), ஹைதராபாத்(ஏப்ரல், 27, 29, 30, மே 6, 8, 11, 12), அகமதாபாத் (ஏப்ரல், 11, 13, 17, மே 6, 9, 10, 13) ஆகிய திகதிகளில் போட்டிகள் நடக்கவுள்ளன.

இமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்மசாலா, சட்டீஸ்கரில் உள்ள ரெய்ப்பூர் ஆகியன புதிய இடங்களாக சேர்க்கப்பட்டுள் ளன. சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் ஒப்புதல் தெரிவிக்கும் பட்சத்தில் ஐ.பி.எல்., புதிய அட்டவணை மிக விரைவில் வெளியிடப்படும்.

# இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் டேவிஸ் கோப்பை போட்டி சென்னையில்

புதுடெல்லி, மார்ச்.19

இந்திய - அவுஸ்திரேலிய அணிகள்மோதும் டேவிஸ் கோப்பை டென்னிஸ்போட்டி சென்னையில் முதல் முறையாக நடக்கவுள்ளது.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆசிய ஓசியானா குழு - 1இன் 3ஆவது சுற்றில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ளன. இதில் வெற்றி பெறும் அணி உலக சுற்றுக்கு முன்னேறும். இந்தப் போட்டியை எங்கு நடத்துவது என்பது குறித்து அகில இந்திய டென்னிஸ் சங்கம் ஆலோசனை நடத்தியது. இதன் முடிவில் சென்னை நுங்கம் பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. மைதானத்தில் போட்டியை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தியாவில் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிகள் இதுவரை புல்தரை ஆடுகளங்களில் மட்டுமே நடந்தன. 30 ஆண்டுகால இந்தப் பாரம்பரியத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, முதல் முறையாக செயற்கை இழை கொண்ட கடின தரையுள்ள சென்னை மைதானத்தில் போட்டி நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டி மே 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

# சண்டிலிப்பாய் கோட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் சம்பியன்

வலி.வடக்கு, மார்ச் 19

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் காணப்பட்ட வேகத்தைத் தொடர்ந்து மானிப்பாய் மகளிர் கல்லூரி காட்டாமையால் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி தனது வெற்றியை இலகுவாகப் பெற்றுக் கொண்டது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு நேர்ச் சுற்றுக்களை முறையே 25:09 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

(1-86)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



Mr.M.Mahendiraraj
Asst. Group Field Manager



Mr.K.Sriram
Asst. Field Manager



Mr.E.G.Desman
Group leader



Mr.M.Muguntharaj
Group leader

எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் யாழ்ப்பாணக் கிளையில் மேற்படி பதவி உயர்வுகளைப் பெற்ற உதவி குழு வெளிக்கள முகாமையாளர் திரு. ம.மகேந்திரராஜ், உதவி வெளிக்கள முகாமையாளர் க.சிறிராம், அணித் தலைவர்களான திரு.கி.டெஸ்மன், திரு.ம.முகுந்தராஜ் ஆகியோருக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அணி உத்தியோகத்தர்கள் எச்.என்.பி. அஸ்யூரன்ஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# ரணில் தடுத்து வைத்துத் தாக்கப்பட்டதாக அரசு கிளப்பிய புரளியை மறுத்தது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 19

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களால் தடுத்து வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டார் என்று அரச உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறியமைக்கு ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் நேற்று சபையில் மறுப்புத் தெரிவித்தனர்.

நடக்காத ஒன்றை நடந்ததாகக் கூறி அரச உறுப்பினர்கள் நாடாளுமன்றில் மிக மிகக் கீழ்த்தரமான முறையில் நடந்துகொள்கின்றனர் என்று அவர்கள் கூறினர்.

இதனால் ஐ.தே.க. உறுப்பினர்களுக்கும் அரச அமைச்சர்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷமன் செனவிரட்னவே இந்தப் பிரச்சினையை முதலில் எழுப்பினார். அவர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

நேற்று(நேற்றுமுன்தினம்) நாம் நாடாளுமன்றக் குழு அறையில் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது ரணில் விக்கிரமசிங்கவைத் தாக்கினோம் என்று அரச அமைச்சர்கள் இந்தச் சபையில் புரளி கிளப்பினர்.

எம்மிடையே பல பிரச்சினைகள் உள்ளன. அது தொடர்பாக நாம் பேசுவோம். காரசாரமாக விவாதிப்போம். ஆனால், ஒருபோதும் ஒழுக்கம் தவறி நடந்ததில்லை. எமது கட்சி அதி உயர்ந்த ஒழுக்கப் பண்புகளைக் கொண்ட ஒரு கட்சி.

அப்படிப்பட்ட கட்சியில் உள்ள நாம் ரணில் விக்கிரமசிங்கவைத் தாக்கினோம் என்று அரச உறுப்பினர்கள் இங்கு கூறினர். அப்படியொரு தாக்குதல் சம்பவம் நடந்ததில்லை; நடக்கப்போவதுமில்லை.

அரசில் எத்தனையோ பேர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறியிருந்தனர். அதை அவர்கள் மறந்துவிட்டனர்.

அரச உறுப்பினர்கள் இவ்வாறான பொய்க்கூற்று ஒன்றை வெளியிட சபாநாயகர் ஏன் அனுமதித்தார்? இது தொடர்பாக சபாநாயகர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார, ''ஐ.தே.கட்சி எம்.பி. ஒருவர் எனக்கு இது தொடர்பாக கையடக் கத் தொலைபேசிமூலம் கூறியதை அடிப்படையாக வைத்தே நான் இந்த சபையில் கூறினேன்'' - என்றார்.

''அப்படியாயின் உங்களிடம் கூறிய எம்.பி. யாரென்று என்னிடம் சொல்ல வேண்டும்'' - என்று சபாநாயகர் கூறினார்.

''நீங்கள் சரியான ஆதாரத்துடன் உண்மையான விடயத்தைச்சொல்கிறீர்கள் என்று நினைத்துத்தான் நான் இது தொடர்பாகப் பேச அனுமதித்தேன்'' - என்றும் அவர் சொன்னார்.

அப்போது எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேராவும் சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார். அரசு உறுப்பினர்கள் தீய எண்ணத்துடன் இங்கு புரளியைக் கிளப்பியுள்ளனர். இது ஒழுக்க நெறிக்கு விழுந்த பாரிய அடி. இது பாரதூரமான விடயம் - என்று அவர் கூறினார். (அ-சி)

## 'உதயன்' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கியிருக்கிறார் என்ற தகவலை குற்றவியல் பிரிவினர் நீதிமன்றில தெரிவித்தனர்.

கோத்தபாயவின் அனுமதிக் கடிதம் மற்றும் வித்தியாதரனின் மருத்துவ அறிக்கை ஆகியவற்றையும் குற்றவியல் பிரிவினர் நீதிவானிடம் சமர்ப்பித்தனர். இதற்கிணங்க, பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுப்படி வித்தியாதரனைத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க கொழும்பு குற்றவியல் பிரிவினருக்கு கோட்டை நீதிமன்ற நீதிவான் ஜெஹான் பலப்பிட்டிய அங்கீகாரம் வழங்கினார். (அ-சி)

## 5 வருடத்துக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியவை வருமாறு:

வடக்கில் தோல்வியின் விளிம்பில் உள்ள புலிகள் தெற்கில் இன மோதல்களை ஏற்படுத்தும் நோக்கில் புதிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று புலனாய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி அக்குரஸ்ஸவில் நடைபெற்ற மீலாத் விழாவின்போது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் பாணியில் மேலும் பல தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்குத் தேவை. எனவே பொது மக்ள் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேல் மாகாணத்தில் குடியேறியவர்களும் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தம்மைப் பதிவு செய்து கௌ்ளவேண்டும். மேல் மாகாணத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் மற்றும் வேறு பொது நிலையங்களிலும் இதற்கான சகல ஏற்பாடுகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் - என்றார். (அ-சி)

## ஐக்கிய தேசியக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி ஜெயவிக்ரம பெரேரா தலைமையில் குழுஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க , ஜோன் அமரதுங்க, சஜித் பிரேமதாஸ, ரேணுகா ஹேரத், மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.பி. திஸநாயக்கா ஆகியோரும் அங்கத்தவர்களாக இருப்பர். எதிர்வரும் திங்கட் கிழமை கூடும் கட்சியின் செயற் குழுவுக்கு இவர்கள் தமது யோசனைகளை கையளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-06)

## பாதுகாப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் 'கெயர்' மேலும் தெரிவித்திருக்கிறது.

,2008 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் தமது நிறுவனம் வன்னியில் இருந்து வெளியேறிய போதிலும் சபீசன் அரச அதிபரின் வழிகாட்டலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தொண்டுகளை அவர்களுக்குரிய விநியோகங்கள் மற்றும் ஆதரவுப் பணிகளை மேற்கொண்டு வந்தார் என்றும் 'கெயர்' நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. 'கெயர்' மனிதாபிமான தொண்டுகளை ஆற்றும் அரசியல் சார்பற்ற அமைப்பாகும்.

மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் நூற்றுக்கணக்கான மக்கள் மரணமடைந்துள்ளனர்; காயமுற்றுள்ளனர். அந்த பகுதிகளில் உணவுப் பொருள்களும், மருந்துப் பொருள்களும் அநேகமாக தீர்ந்து போய்விட்டன. அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியே செல்ல விரும்புபவர்கள் அவ்வாறு செய்ய முடியவில்லை. அதற்குப் பதில் மோதலில் அகப்படுவதை தவிர்ப்பதற்காக மழைநீர் நிரம்பிய பதுங்கு குழிகளுக்குள் தங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். வெளியே செல்வதற்கு முயற்சித்தவர்களில் பெரும்பாலானோரை விடுதலைப் புலிகள் தடுத்து விடுகின்றார்கள் - என்று 'கெயர்' விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகஇணையத்தளம் ஒன்று தெரிவித்தது. (அ-1)

## வன்னிக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த திகதி மற்றும் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் முயற்சிகள் இடம் பெறுகின்றன என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களுக்குச் செல்வதற்கு ஐரோப்பிய ஒன்றியக் குழுவுக்கு அனுமதி வழங்கப்படலாம் என வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு அருகில் செல்வதற்கு இவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியக் குழுவொன்று இலங்கை அரசு தங்களுக்கு முழுமையான சந்தர்ப்பத்தை வழங்கவில்லையென குற்றம்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## பலவந்தமாகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பதே எமது தற்போதைய நிலைப்பாடாகும்.

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

புலிகளிடம் சிக்கியுள்ள மக்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நாளாந்தம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வருகை தருகின்றனர். வடக்கில் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகள் சிறந்த முறையில் இடம்பெறுவது இதன் மூலம் புலனாகிறது.

### அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 45,519 பேர் வருகை

ஜனவரி முதல் இதுவரை 45 ஆயிரத்து 519 பேர் விடுவிக்கப்படாத பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வருகை தந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் 1,567 பேர் வந்துள்ளனர். அவர்கள் கூறும் கருத்துக்களைக் கேட்டால் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள், கஷ்டங்கள் அனைத்தும் அரசால் வந்ததல்ல என்பது நன்கு தெளிவாகின்றது.

மக்கள் பெரும் எண்ணிக்கையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர தொடர்ந்தும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் அழைத்து வருவதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு புலிகளை அரசு கேட்டுக்கொண்டது. அதே போன்று உலக நாடுகளும் கேட்டுக் கொண்டன. எனினும் புலிகள் அதற்கு செவிமடுக்கவில்லை - என்றார். (அ-சி)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தொடரில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தின் போதே இக் கருத்து முன்வைக்கப்பட்டது.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதன் அவசியத்தை மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கருத்து புலப்படுத்துவதாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிரதிநிதி ஜீலி டி-ரி வெரோ தெரிவித்துள்ளார்.

''இலங்கையில் நடைபெறுவனவற்றைப் பார்க்கும்போது அங்கு யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குழாத்திற்கு எதிரான குற்றங்கள் இடம் பெறுகின்றன போலதோன்றியுள்ளது. இதன் காரணமாக இலங்கை நிலைவரம் பற்றி சுயாதீன விசாரணை அவசியம்'' - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கு அரசு ஐக்கிய நாடுகளுக்கும், ஏனைய அமைப்புகளுக்கும் முழுமையான அனுமதி வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக அவசர நடவடிக்கையொன்றை பாதுகாப்புச்சபை எடுக்காவிட்டால் அது இனப்படு கொலைக்கு அனுமதிப்பதாக அமையும் என பிரான்ஸைச் சேர்ந்த லிபேர் டெஸ எனும் அமைப்பு எச்சரித்துள்ளது.

பாதுகாப்புச்சபை இலங்கை தொடர்பாக தீர்மானமொன்றை கொண்டு வரவேண்டும் என்றும் அந்த அமைப்பு கேட்டுள்ளது. (அ-சி)

## வன்னி மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### பிரான்ஸ் அச்சம்

இலங்கையின் நிலைவரம் குறித்து தாம் மிகுந்த அச்சம் அடைந்துள்ளார் எனத் தெரிவித்துள்ள பிரான்ஸின் ஐ.நா. பிரதிநிதி, மேர்தல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களின் மோசமான நிலை குறித்து, தான் மிகுந்த வேதனை அடைகிறார் எனவும் குறிப்பிட்டார்.

இந்த மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் செய்ய வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் கடும் சேதங்கள் குறித்து ஜப்பானின் பிரதிநிதி சினிச்சி கிடஜிமாவும் கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இன மோதலுக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் நடைமுறைகளை முன்னெடுப்பது மிக முக்கியமானது. இலங்கையின் உள்நாட்டில் மோதல் தீவிரமடைந்துள்ளதையடுத்து மனித உரிமை நிலைவரம் மோசமடைந்துள்ளது எனப் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தோர் தொடர்பான சர்வதேச கொள்கைகளைப் பின்பற்றி இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகளை மதிக்குமாறு இலங்கையைக் கனடா கேட்டுக்கொண்டது.

பிரிட்டனும் இலங்கை நிலை குறித்து மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் கவலை வெளியிட்டுள்ளது.

பிரிட்டனின் பிரதிநிதி மெலெனி ஹொப்கின்ஸ் காணாமற் போதல், படுகொலைகள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் பரந்துபட்ட அளவில் காணப்படுகின்றன என நம்பகத்தன்மை மிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவும் மோதல் நடைபெறும்பகுதிகளில்சிக்கியுள்ள2லட்சம்பொது மக்கள் குறித்துக் கவலை வெளியிட்டுள்ளது.

சகலரதும் பிரச்சினைக்கும் தீர்வைக் காணும் வகையில், அரசியல் தீர்வே நிரந்தரத் தீர்வைக் கொண்டுவரும் என்றும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

நெதர்லாந்து, பெல்ஜியம், ஜேர்மனி போன்ற நாடுகளும் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கை நிலைவரம் குறித்த தமது கடும் கவலையை வெளியிட்டுள்ளன. (அ-சி)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான
வங்கியியல் கற்கை நெறிகள்
DBF,CBF
அடிப்படைத்தகைமைகள்
G.C.E. (A/L), G.C.E. (O/L) 06 PASSES WITH 05 Credits including Maths / Commerce & Accounts, and Language (Tamil/English)
ஆரம்பம்- 21.03.2009
Further Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464. Hospital Road,
Jaffna.

BIT
விரிவுரைகள் ஆரம்பம்
Semester 1 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான Semester 2 விரிவுரைகள் எதிர்வரும் 21.03.2009 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.
Director
Institute of Informatics Studies (IIS)
#100 Clock Tower Road, Jaffna
T.P. 0212222886

BIT வகுப்புக்கள் @ mis
BiT 2nd - sem. sat/sun 7.30 - 9.30am
starts from 22nd march, sunday
BIT 4th - sem sat/sun 9.30 - 11.30am
starts from 29th march, sunday
By R.Kumaran - B.Sc.
74, Sabapathy Lane, Jaffna T.P No- 0602216083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.